Bishop George Rajendran sdb
DIOCESE OF THUCKALAY

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District - 629175
Tamil Nadu, India

## *BISHOP'S ENGAGEMENTS* – MAY 2014

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Thursday | 10.00 am | Palakal Kudumba Yogam, Kottayam |
| 2 | Friday | 09.30 am | VBS Training, Kaluvilai >> Edathua |
| 3 | Saturday | 07.30 am<br>11.30 am | Holy Qurban at Edathua<br>Meeting at Veroor, Chanagancherry >> Thuckalay |
| 4 | Sunday | 09:00 am<br>02:00 pm | Mukkootukal Parish Jubilee Qurbana<br>SABS Vestition and church feast, Pallikkonam |
| 5 | Monday | | VBS visits to parishes,<br>Visit to Vocation Camp- Sangamam |
| 6 | Tuesday | 09:30 am | Pastoral Council |
| 7 | Wednesday | 09.30 am | Curia \| VBS visits to parishes |
| 8 | Thursday | 05.30 pm | Golden Jubilee celebration of Fr. Chacko Basil CMI |
| 9 | Friday | | VBS visits to parishes |
| 10 | Saturday | 07:00 am<br>10.00 am<br>02.00 pm<br>05.00 pm | First Holy Communion, Nagercoil<br>Farewell to SMCS retiring teachers<br>Parish level college finance committee meeting<br>Blessing of Maruthampara mission station |
| **11** | **Sunday** | **08.00 am<br>01.00 pm<br>04.30 pm** | **Holy Qurbana at Kunnuvilai<br>Visit of Major Archbishop<br>Bp Remegius' Jubilee celebration >> Vellore** |
| 12 | Monday | 05:00 pm<br>05.30 pm | Archbishop A M Chinnappa Golden Jubilee<br>Night vigil, Sangamam |
| 13 | Tuesday | 09:00 am | Priest Conference |
| 14 | Wednesday | | VBS visits to Parishes |
| 15 | Thursday | | VBS visit to Parishes |
| 16 | Friday | <br>10.00 am | VBS visits to parishes<br>Minor seminary Staff meeting >> Kanjirapalli |
| 17 | Saturday | | Marriage Holy Qurbana, Kanjirapally >> Thuckalay |
| **18** | **Sunday** | **08.00 am<br>05.00 pm** | **Vincent de Paul Golden Jubilee<br>Mezhacode Church Feast** |
| 19 | Monday | | Bishop's House |
| 20 | Tuesday | | Bishop's House |
| 21 | Wednesday | 10:30 am<br>06:00 pm | Marriage Qurbana at Arukani<br>Maruthamcode Kodiyattu |
| 22 | Thursday | 09.00 am | Curia |
| 23 | Friday | 05:00 pm | First Mass of New Priests, Nithiravilai |
| 24 | Saturday | 09:00 am<br>03:30 pm | Mission League National level Inauguration<br>Blessing of Dorothian Convent, Panpoli |
| **25** | **Sunday** | **06.30 am<br><br>09.30 am** | **Holy Qurbana and Blessing of Foundation stone:<br>Manchalumoodu<br>Visit of Thuckalay friends: Pala** |
| 26 | Monday | 10.00 am | Marriage Qurbana at Palappallam |
| 27-29 | Tue-Thu | | Bishop's House |
| 30 | Friday | | Family Retreat, Kalluvilai |
| 31 | Saturday | | Family Retreat, Kalluviai |

இறையருள் செய்திகளுக்கு iraiarultkly@gmail.com




*Editorial Board*

*Patron*
His Excellency
Mar George Rajendran

*Chief Editor*
Fr. Joseph Santhosh

*Executive Editor*
Mr. Soundara Raj

*Associate Editors*
Fr. Tony Velikakathu
Mr.Edwinson
Mr. Berlin Athencod



*Published by*
Fr. Joseph Santhosh
Bishop's House
Post Box No . 12
Thuckalay - 629 175
K.K.Dist,Tamil Nadu,India.

*Printed at*
Evans Printers
Jacob Compound, Marthandam.
Ph:04651-272666


## உள்ளே...


2
8
9
11
14
17
28
32
33
35
36
37
41
44
46
47
48


**1**

## புனிதர் பட்டமளிப்புத் திருநிகழ்வில் திருத்தந்தை பிரான்சிஸ்

ஏப்ரல் 27 ஞாயிறன்று புனித பேதுரு பசலிக்காப் பேராலய வளாகத்தில்உரோம் நேரம் காலை 10 மணிக்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் முத்திப்பேறுபெற்ற திருத்தந்தை 23ஆம் ஜாண் மற்றும் முத்திப்பேறுபெற்ற திருத்தந்தை 2ஆம் ஜாண்பால் அவர்களும் புனிதர்களாக உயர்த்தப்பட்டனர். இத்திருநிகழ்வில் முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களும் கலந்துகொண்டார்.




வாழும் இரு திருத்தந்தையர் பங்கேற்று மறைந்த இருத்திருத்தந்தையர்கள் புனிதர்களாக உயர்த்தப்படுவது திருச்சபை வரலாற்றில் இதுவரை நிகழாத தனித்துவமிக்கதொரு சிறப்பு. இத்திருநிகழ்வில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கிய மறையுரை.

உயிர்ப்புப்பெருவிழாவின் எண்கிழமையை நிறைவுசெய்யும் ஞாயிறை இறைஇரக்கத்தின் ஞாயிறென அர்ப்பணிக்க விழைந்தவர் திருத்தந்தை 2ஆம் ஜாண்பால் அவர்கள். இந்த ஞாயிறின் இதயமாக விளங்குவது உயிர்த்த இயேசுவின் உன்னதமான காயங்கள். இக்காயங்களை இயேசு தன் சீடர்களுக்கு உயிர்த்த ஞாயிறன்றே காட்டினார். ஆனால் சீடர் தோமா , அன்று அவர்களுடன் இல்லாததால் நேரடியாகக் காணாமல் நம்பப் போவதில்லை என்று கூறினார். அடுத்த வாரம் அந்த மேலறையில் மீண்டும் தோன்றிய இயேசு, தன் காயங்களைத் தொடும்படி தோமாவை அழைத்தார். அனைத்தையும் நேரடியாக ஆய்வுசெய்து ஏற்றுக்கொள்ளும் மனம்கொண்ட தோமா இயேசுவின் முன் "என் ஆண்டவரே என் கடவுளே" என்ற வார்த்தைகளுடன் மண்டியிட்டார். இயேசுவின் காயங்கள் ஓர் இடறலாக உள்ளன; நம் நம்பிக்கைக்கு தடையாக, சோதனையாக உள்ளன. உயிர்த்த இயேசுவின் உடலில் இக்காயங்கள் நீங்காமல் தங்கியுள்ளன. திருத்தந்தை 23ஆம் ஜாண், 2ஆம் ஜாண்பால் இருவரும் இயேசுவின் காயங்களைக் காணவும், அவற்றைத் தொடவும் தயங்கவில்லை, கிறிஸ்துவின் உடலைக்கண்டு அவர்கள் வெட்கமடையவில்லை; சிலுவையைக் கண்டு அவர்கள் இடறல்படவில்லை. துன்புற்ற இயேசுவில் அவர்கள் இருவரும் துன்புறும் மக்களைக் கண்டனர். இருபதாம் நூற்றாண்டின் அருள்பணியாளர்களாக, ஆயர்களாக, திருத்தந்தையராக விளங்கினர். துயரங்கள் மத்தியில் அவர்கள் வாழ்ந்தாலும், அவற்றால் வீழ்த்தப்படவில்லை. அவர்களை பொறுத்தவரை அத்துயரங்களைவிட கடவுள் வலிமை மிக்கவர். நம்பிக்கை வலிமை வாய்ந்தது. தன் காயங்கள் வழியே மீட்பர் கிறிஸ்து காட்டிய இரக்கம் அத்துயரங்களைவிட வலிமை மிக்கது. அன்னை மரியாவின் துணையும் வலிமை மிக்கது என்பதை அவர்கள் இருவரும் உணர்ந்தவர்கள். கிறிஸ்துவின் காயங்களை ஏறெடுத்து நோக்கிய இவ்விருவரும் வாழ்வுக்கும், நம்பிக்கைக்கும், விவரிக்க இயலாத மகிழ்வுக்கும் சான்றுகளாக வாழ்ந்தனர். தங்களை முற்றிலும் மறுத்து, துன்பம் என்ற கிண்ணத்தின் கசப்பான இறுதித் துளிவரை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை உயிர்ப்பின் மகிழ்வு தருகிறது. இந்த மகிழ்வு, துவக்க கால கிறிஸ்தவர்கள் குழுமத்தில் தெளிவாகத் தெரிந்தது. அந்த ஆரம்பகால அனுபவத்தை, இரண்டாம் வத்திக்கான் சங்கம் நமக்கு மீண்டும் கொணர்ந்தது. முத்.திருத்தந்தையர்கள் 23ஆம் ஜாண் மற்றும் திருத்தந்தை 2ஆம் ஜாண்பால் அவர்களும் தூய ஆவியுடன் இணைந்து திருஅவையில் புத்துணர்வைக் கொணர்ந்தனர்.

திருச்சபையின் அடிப்படையான, அழகான அம்சங்களை உலகிற்கு வெளிப்படுத்துபவர்கள் புனிதர்களே. அவர்கள் தான் திருஅவையின் பாதைக்கு வழிகாட்டிகள். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டியதன் வழியாக திருத்தந்தை23ஆம் ஜாண்

அவர்கள், தூய ஆவிக்கு தன்னை முற்றிலும் ஒப்படைத்தவர் என்பதை உலகறிய செய்தார். திருச்சபையின் மெய்யான மேய்ப்பராக, பணியாளர் தலைமைத்துவம் கொண்டவராக அவர் விளங்கினார். தூய ஆவியின் தூண்டுதல்களுக்கு முற்றிலும் திறந்தமனம் கொண்ட திருத்தந்தையாக அவர் வாழ்ந்தது, இவ்வுலகிற்கு அவர் தந்த மிகப்பெரும் சாட்சி.

இறைமக்களுக்கு ஓய்வின்றி உழைத்த திருத்தந்தை 2ஆம் ஜாண்பால் அவர்கள், குடும்பங்களின் திருத்தந்தை என்று தன்னை அடையாளம் காட்டினார். குடும்பங்களின் திருத்தந்தை என்று மக்கள் தன்னை நினைவுகூர வேண்டுமென்பதே தன்விருப்பம் என்று அவரே ஒருமுறை கூறியுள்ளார். குடும்பங்களில் புத்துணர்வை உருவாக்க ஆயர்கள் சிறப்பு மாமன்றம் அமைக்கப்பட்டுள்ள இவ்வேளையில், முத்.திருத்தந்தை 2 ஆம் ஜாண் பால் அவர்கள் விண்ணிலிருந்து இம்முயற்சிகளை வழிநடத்துவார். குடும்பத்தை மையப்படுத்திய சிறப்பு மாமன்றம், திருச்சபை முழுவதும் தூய ஆவியின் தூண்டுதல்களுக்கு திறந்த மனம் கொண்டிருக்கவேண்டும் என்பதற்காக இவ்விரு புனிதர்களின் பரிந்துரையை நாடுவோம். கிறிஸ்துவின் காயங்களால் இடறல்படாமல் இறைஇரக்கத்தின் பேருண்மையில் இன்னும் ஆழமாய் பங்கேற்கவும், இறைஇரக்கத்தின் துணையோடு மன்னிக்கும் மனதையும், நம்பிக்கைக் கொண்ட மனதையும் நாம் பெறுவதற்கு இப்புதிய புனிதர்கள் இருவரும் நமக்குக் கற்றுத்தருவார்களாக! என்று மறையுரையாற்றினார்.

திருப்பலியின் இறுதியில் கலந்துகொண்ட மக்களுக்கும், விழாவை ஏற்பாடு செய்த உரோம் நகராட்சிக்கும், தன்னார்வ தொண்டர்களுக்கும் வாழ்த்தையும், நன்றியையும் தெரிவித்தார். மேலும் புனித 23ஆம் ஜாண் பிறந்த ஊரான பெர்கமோவிலிருந்து வந்திருந்த திருப்பயணிகள் மற்றும் புனித 2ஆம் ஜாண்பால் பிறந்த போலந்தின் கிரக்கோவியாவிலிருந்து வந்திருந்த திருப்பயணிகள் ஆகியோருக்கும் சிறப்பான வாழ்த்துக்களைக்கூறினார். மீண்டும் ஒருமுறை முன்னாள் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்களை சந்தித்து இருவரும் வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டு, அனைத்து நாடுகளின் பிரதிநிதிகளை தனித்தனியாக சந்தித்தப் பின், தன் வாகனத்தில் ஏறி கூடியிருந்த 12 லட்சம் மக்களின் நடுவே வலம் வந்து அனைவருக்கும் வாழ்த்துக்களைக் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.



## இளைஞர் மாநாட்டிற்கு திருத்தந்தையின் செய்தி

இயேசுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட சீடர்களும் தவறிழைத்தனர், ஆனால், உயிர்த்த இயேசவைச் சந்தித்தபின் உரம்பெற்ற திருஅவைக்காக துன்பங்களை ஏற்கும் மனநிலையைப் பெற்றனர் என இளைஞர்களுக்கு ஒலி-ஒளிச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அர்ஜென்டினாவின் Buenos Aires நகரில் இடம்பெற்ற அப்பகுதி இளைஞர் மாநாட்டிற்கென தன் செய்தியை அனுப்பியுள்ள



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். 'எவை குறித்தும் அஞ்சாமல் சுதந்திர உணர்வுடன் இறைவனுக்குப் பணியாற்றவேண்டிய இளையோரின் கடமையை வலியுறுத்தியுள்ளார். இயேசுவின் சீடரான பேதுரு அவரை மறுதலித்தார், யூதாசு அவரைக் காட்டிக்கொடுத்தார், ஏனையச் சீடர்களோ அவரை விட்டுவிட்டு ஓடினார், இருப்பினும் அவரின் சீடர்களோ நற்செய்தியை பரப்புவதில் எண்ணற்ற சித்ரவதைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர் என இளைஞர்களுக்க அனுப்பிய தன் செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசுவின் பாதையை பின்பற்ற விரும்பினாலும் தன் சொத்துக்களை இழக்க விரும்பாததால் கவலையுடன் இயேசுவிடமிருந்து விடைபெற்றுச் சென்ற பணக்கார இளைஞன், ஊதாரி மகன் உவமையில் கூறப்பட்டுள்ள இளைய மகன், உயிர்பெற்ற நயீன் விதவையின் மகன் போன்றவர்களை தன் செய்தியில் சுட்டிக்காட்டி, தென் அமெரிக்க இளைஞர்களுக்கு ஊக்கத்தை வழங்கியுள்ளார் திருத்தந்தை. விவிலியத்தில் காணப்படும் பெண்களின் துணிச்சலையும் உதாரணமாக எடுத்தியம்பி இளம்பெண்களுக்கு வழங்கியுள்ள ஊக்கமும் திருத்தந்தையின் இச்செய்தியில் இடம் பெற்றுள்ளது.

**சீரோ மலபார் திருச்சபையின் முதன்மைப் பேராயர் மார் ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி அவர்கள் அருள்தந்தையர், துறவிகள், பொது நிலையினர் அனைவருக்கும் எழுதிய சுற்று மடலின் சுருக்கம்.**

சீரோ மலபார் திருச்சபையின் 22-வது ஆயர் குழுமத்தின் முதல் அமர்வு ஜனவரி 7 முதல் 11 வரை காக்கநாடு புனித தோமையார் குன்றில் நடைபெற்றது. நாற்பது ஆயர்கள் பங்கெடுத்தனர். வழக்கம் போல காலை திருப்பலி முடிந்ததும் தங்கள் அலுவல்களில் ஈடுபட்டனர்.

கடந்த கூட்டத்திற்குப் பின் அருள் பொழிவு பெற்ற புதிய ஆயர்களான மார் ஜோசப் கொல்லம்பறம்பில் CMI, மார் ஜோஸ் புத்தன் வீட்டில் அவர்களும் ஓய்வு பெற்ற ஆயர்களுமாக தற்போது ஐம்பத்தொரு பேர் உள்ளனர். ஜெகதல்பூர் ஆயர் மார் சைமன் ஸ்டோக் பாலாத்ரா அவர்களும், எர்னாகுளம் அங்கமாலி துணை ஆயர் மார் தோமஸ் சக்கியத் அவர்களும் தங்களது குருத்துவ அருள்பொழிவின் பொன்விழாவைக் கொண்டாடுகிறார்கள். அவர்கள் திருச்சபைக்கு செய்த சேவையை நன்றியோடு நினைத்து அவர்களுக்காக செபிப்போம். கேரளத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களுக்கு முதலில் நிறுவப்பட்ட கல்யான் மறை மாவட்டம் தனது வெள்ளி விழாவை கடந்த ஆண்டு நவம்பர் திங்களில் கொண்டாடியது. சில மறைமாவட்டங்களைப் பார்வையிட்டேன். பேராயர் மார் குரியாகோஸ் பரணிங் குளங்ஙரா அவர்கள் புதிய வசதிகளான கூரியா பரிதாபாத்தில் ஆயர் இல்லம் போன்றவை ஏற்படுவதில் வெற்றியடைந்தது பாராட்டுதற்குரியது.

கீழ்திசை சபைகளின் மகாசபை கூட்டத்தின் கலந்து கொண்டேன். அக்கூட்டத்தில் குடிபெயர்ந்த நமது மக்கள் குறிப்பாக வளைகுடா நாடுகளில் வாழ்பவர்களுக்கு திருச்சபை அமைப்புகள் உருவாக்கவேண்டிய உடனடித் தேவையை திருத்தந்தையின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். திருதந்தை செய்வார் என நாம் நம்புவோம்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் சுற்றுச்சூழலை பாதுகாக்க கொண்டு வரப்பட்ட காட்கில் - கஸ்தூரி ரங்கன் அறிக்கையினஅம்சங்கள், அப்பகுதியில் வாழும் விவசாயிகள் குறித்து அரசியல் தலைவர்கள் மற்றும் அரசு அதிகாரிகளுடன் பேசப்பட்டன. இதற்காக இணைந்தும், தனிப்பட்ட முறையில் எடுத்த நடவடிக்கைகள் ஊக்கமளிப்பதாக இருந்தன.

தக்கலை மறைமாவட்டத்தில் மூன்று அருட்தந்தையர்கள் இறந்ததும், சாகர் மறை மாவட்டத்தில் இளம் குருவானவர் சாலை விபத்தில் இறந்ததும் நம்மையும், அம்மறைமாவட்டங்களையும் துயரத்தில் ஆழ்த்தியது. அம்மறை மாவட்டங்களையும், குருக்களையும் நமது செபத்தில் நினைப்போம். மேலும் அண்மையில் இறந்த காலிக்கட் மறைமாவட்டத்தின் சிறக்கல் மிஷனில் நீண்ட காலம் சேவைசெய்த இத்தாலிய அருள்தந்தை சூக்கோல் அவர்களையும் செபத்தில் நினைவு கூர்வோம்.

**தியான மையங்கள்**

மேய்ப்புப் பணியில் நிகழும் பல பிரச்சனைகள் குறித்து ஆயர் குழுமம் விவாதித்தது. சில பொதுச் செய்திகளை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர ஆயர் குழுமம் விரும்புகிறது சீரோமலபார் சபையின் தியான மையங்கள் செய்யும் சேவையை ஆயர் குழுமம் மதிப்பீடு செய்தது. தியான மையங்கள் ஆன்மீக மறுமலர்ச்சியை கொண்டுவருவது சிறந்தது. அவை திருச்சபையின் போதனைக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். மூடநம்பிக்கைகள் ஊக்குவிக்கப் படக்கூடாது. ஒலி மாசுபடுதல், குணப்படுத்தும் செயல்களில் வரம்புமீறல் போன்றவை களையப்பட வேண்டும். பங்குமைய விசுவாச வாழ்வும், மேய்ப்புப்பணியும் பாதிக்காத வகையில் தியான மையங்கள் செயல்பட வேண்டும். இறைவழிபாட்டின் தனித்தன்மையை தியான மையங்கள் பாதுகாக்க வேண்டும். துறவற சபைகள் நடத்தும் தியான மையங்களில் தங்களின் இயல்பான வழிபாட்டை மேம்படுத்தலாம். அம்மையங்களில் அருள்தந்தையர்கள் அவர்களுக்குரிய வழிபாட்டு முறையில் நற்கருணை வழங்கலாம். நற்கருணை வழிபாடு பிற இறையியல் முறையில் நடத்திட சட்டப்படி உரிய அனுமதி பெறவேண்டும். எல்கை தாண்டி தியானங்கள் நடத்த உரிய அனுமதி அப்பகுதி திருச்சபை அதிகாரிகளிடமிருந்து பெறவேண்டும். ஆயர்

குழுமம் இது குறித்து தெளிவான வழிகாட்டுதல்கள் கொடுத்துள்ளன.

விசுவாச வாழ்வு பற்றிய போதனை, காலத்திற்கு ஏற்ற தேவையான நல்லெழுக்கப் போதனை ஆகியவற்றை பேதமின்றி(தவறின்றி) உண்மைத் தன்மையுடன் வழங்கவும், அவற்றைக் கவனிக்கவும் இறைஇயல் மன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கு அறிவிக்கின்றேன்.

**தனிச்சட்டங்கள்**

ஆயர் குழுமத்தில் பல ஆண்டுகளாக விவாதித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பல திருச்சடங்குகள் தற்போது அங்கீகரிக்கப்பட்டு சீரோ மலபார் சபையின் தனிச்சட்டங்களாக வெளியிடப்பட இருக்கிறது என்பதை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக உழைத்தவர் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

**புனித எப்ரேம் இறையியல் கல்லூரி - சாட்னா.**

வட இந்தியாவில் சாட்னா மிஷன் மறைமாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள புனித எப்ரேம் இறையியல் கல்லூரி ஆயர் பேரவையின் கீழ் பணியாற்றும் மிஷன் குருமடமாக (Mission Seminary) 2014 மார்ச் 29-ஆம் நாளில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. குருமடத்தினை உருவாக்கவும், வளர்க்கமும் ஆரம்பகாலத்தில் அரும்பாடுபட்ட ஆயர் மார் ஆபிரகாம் மற்றம் VC அவர்களையும், இக்குருமடத்தை தற்போதுள்ள நிலையில் உயர்த்த பாடுபடும் ஆயர் மார் மாத்யூ வானியக்கிழக்கேல் VC அவர்களையும் நன்றிநிறை இதயத்தோடு பாராட்டுகிறேன்.

**குருத்துவ மாணவர்கள் மற்றும் குருவானவர்களுக்கான தொடர் பயிற்சிகள்**

குருக்களுக்கும், குருத்துவ மாணவர்க்கும் தொடர் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டியதின் முக்கியத்துவத்தை உணர்ந்து, திருச்சபையின் பல அமைப்புகளைலும் பரந்த விவாதம் நடத்தி பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். குருக்களுக்கு, சபையின் பாரம்பரியத்தை உள்ளடக்கிய, புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்கபட வேண்டியது அவசியமும், முக்கியமானதுமாகும். மேலும்



அப்பயிற்சிகள் செயலாக்கமும் திறனும் கொண்டதாகவும் இருக்கவேண்டும். புனித தாமஸ் குன்றில் வைத்து ஜீபிலி கொண்டாடும் குருக்களின் கூட்டங்கள் குருக்களின் தோழமையை வளர்த்துகிறது. 2015ஆம் ஆண்டு உயர்பேராய மாமன்றக்கூட்டம் நடத்தவது என ஆயர்குழுமம் விவாதித்தது. சீரோ மலபார் திருச்சபை உயர் பேராயமாக உயர்த்தப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவுபெற்றிருப்பதை சிறப்பாக கொண்டாடவேண்டும்.

**இளைஞர் பணிகள்**

சீரோ மலபார் சபை செயல்படுத்த வேண்டிய இளைஞர் பணிகளை ஒருங்கிணைந்து ஊக்குவிக்க தேவையான நுட்பம் வேண்டும். ஜீசஸ் இளைஞர் இயக்கம் திருச்சபையோடு இணைந்து விரிவாக செயல்படுவது குறித்த விவரங்கள் பின்னர் வழங்கப்படும். ஆகஸ்டு 10 முதல் 17 வரை இளைஞர் பெருந்திரள் தென்கொரியாவில் நடைபெற உள்ளது.

**குடும்பம், பொதுநிலையினர் பணிக்குழு**

மேய்ப்புப்பணியில் குடும்ப அமைப்புகளின் முக்கியத்துவத்தையும், பயன்பாட்டையும் கருத்தில்கொண்டு கூடுதல் வழிகாட்டல்களை பொதுநிலையிலனர் பணிக்குழு தயாரித்து வழங்கும்.

**பரிதாபாத் மறைமாவட்டமும், நற்செய்திப்பணியும்**

பரிதாபாத் மறைமாவட்டதில் போதிய குருக்கள் இல்லாததால், நற்செய்தி பணியாற்ற துறவறசபைகளும், பிற மறைமாவட்டங்களும், திருத்தொண்டுப்பணிக்கென திருநிலைப்படுத்தப்பட்டவர்களும் முன்வர வேண்டுகிறேன்.

புலம்பெயர்ந்து வாழும் சீரோ மலபார் மக்கள் திருவருட்சாதனங்களைப்பெற சொந்த மறைமாவட்டம் வரும்போது சமர்ப்பிக்கப்டும் சான்றிதழ்கள், முறையாக நியமிக்கப்பட்ட பங்குத்தந்தையர்களிடமிருந்து அல்லது பொறுப்பாளர்களிடமிருந்து பெற்றிருக்கிறார்களா என்பதை உறுதி செய்து அருட்சாதனங்கள் வழங்கவேண்டும்.

**மெல்போர்ன் மறைமாவட்டமும், இந்தியாவின் மேய்ப்புப்பணி பார்வையாளரும்**

இந்தியா மற்றும் பிறநாடுகளில் புலம்பெயர்ந்துவாழும் சீரோமலபார் கிறிஸ்தவர்களுக்கு திருச்சபையின் மேய்ப்புப் பணி கிடைக்க வேண்டுமென்பதைப் பரிசீலித்தன் விளைவாக, ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் மறைமாவட்டம் உருவாக்கப்பட்டு அதன் ஆயராக போஸ்கோ புத்தூர் அவர்கள் நியமிக்கப்பட்டார். அவர் நியூசிலாந்து நாட்டின் மேய்ப்புப்பணியின் பார்வையாளராகவும் செயல்பட்டு வருகிறார். சுமார் 50000 இறைமக்களைக்கொண்ட இப்புதிய மறைமாவட்டத்திற்காக செபிப்போம். ஆஸ்திரேலியாவில் இம்மறைமாவட்டம் கிடைத்திட அனுமதி வழங்கிய திருத்தந்தைக்கும் ஆஸ்திரேலியா ஆயர் பேரவைக்கும் நாம் நன்றிக் கடன்பட்டவர்கள்.

திருத்தந்தை இந்தியாவிற்கு மேய்ப்புப்பணி பார்வையாளராக மார் ரபேல் தட்டில் அவர்களை நியமித்துள்ளார். இந்நியமனம் இந்தியாவில் புலம்பெயர்ந்து வாழும் சீரோ மலபார் கிறிஸ்தவர்களின் மேய்ப்புப் பணி சிறப்படைய உதவிடும்.

**திருநிலைப்படுத்தப்பட்ட போதகர்கள்**

திருநிலைப்படுத்தப்பட்ட போதகர்களின் பணி சிறப்பானது. இவர்கள் திருச்சபையின் மேய்ப்புப்பணி, நற்செய்திப்பணி பகுதிகளில் பணியாற்றுவர். சீரோ மலபார் திருச்சபையின் எல்லை தாண்டி பணியாற்றும்போது தங்கள் தாய்திருச்சபையின் தனித்தன்மையையும், உறவையும் பாதுகாக்க வேண்டும். துறவற சபைகள் ரோமன் கூரியாவின் வழிகாட்டுதலின் கீழ் லத்தீன் திருச்சபையில் பணியாற்றுவதுபோல் தாய்திருச்சபையின் வழிகாட்டுதலைப் பின்பற்றி பணியாற்றவேண்டும்.

**ஒப்புரவும் திருவிருந்துக் கொண்டாட்டமும்**

தொடக்க நிலை திருவருட்சாதனங்களுடன் முதல் திருவிருந்து பெறுவோர், போதிய வயது நிரம்பியவராகவும், சரியான தயாரிப்புப் பெற்றவராகவும் இருக்க வேண்டும். தகுந்த தயாரிப்புடன் ஒப்புரவு செய்து திருவிருந்து பெற தேவையான விபரங்கள் அடங்கிய புத்தகத்தை மறைக்கல்வி பணிக்குழு வெளியிடும். அத்தகைய திருவிருந்துக் கொண்டாட்டங்கள் தேவையற்றவற்றை தவிர்த்து, ஆன்மீக உணர்வை பேணி வளர்க்கும் திருவழிபாடாக அமைய வேண்டும்.

**சில திருவழிபாடு பற்றிய செய்திகள்**

திருவழிபாட்டிற்குத் தலைமை தாங்கும் குருவிர்கென சிறப்புத் தகுதியேதும் தேவையில்லை. திருவழிபாடு நடத்துவது ஒரு குருவானவரென்றால் அவரை திருவழிபாடு நடத்துபவர் எனலாம். கூடுதலாக நிற்போர் இணைந்து திருவழிபாடு நடத்துவோர்கள் ஆவர். திருநிலைப்படுத்துதல் திருநிகழ்வுகளில் ஆயருடன் நிற்பவருடன் ஒருவர் உயர்திருத்தொண்டர் எனவும், மற்றொருவர் குருவானவராகவும் இருக்க வேண்டும். புதிதாக திருநிலைப்படுத்தப்பட்ட குருக்கள் திருநிலைப்பாட்டு இறுதி செபங்களைச் சொல்லுதல் கூடாது.

திருப்பலியில் வாசகங்கள் அடங்கிய புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டதை அனைவரும் அறிந்திருப்பீர்கள். அதனை இவ்வாண்டின் புனித வாரம் முதல் பயன்படுத்த வேண்டுகிறேன். ஆலயம் திருநிலைப்படுத்துதல், Deppa திருநிலைப்படுத்துதல் போன்றவற்றிற்கான வழிபாட்டு நூல்களுக்கு திருத்தந்தையின் அனுமதி கிடைத்ததை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீரோமலபார் திருச்சபைக்காக திருச்சபைப் பாடல் ஒன்று மலையாளம் அல்லது பிற மொழியிலோ உருவாக்க பாடற்போட்டி நடத்த ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. பாடல் உருவாக்க பாடற்கலை வல்லுநர்களின் ஒத்துழைப்பைக் கேட்டுக்கொள்கிறேன்.

---

**Pope Francis**

## TWEETS



**Pope Francis** @Pontifex Apr 8

We need to rediscover a contemplative spirit, so that the love of God may warm our hearts.

# சிறுமலர் மிஷன்லீக்

மிஷன்லீக் தலைவர்களுக்கான மூன்று நாள் பயிற்சி முகாம் ஏப்ரல் 21 திங்கள் காலை 9.30மணியளவில் திருப்பலியுடன் ஆரம்பமாகி 23 புதன் மாலை 3.30 மணியளவில் இனிதே நிறைவடைந்தது. பயிற்சிகளை **செராபின் சகோ. ஜோமி** மற்றும் குழுவினர் நடத்தினார்கள். நற்கருணை ஆராதனை, ஜெபமாலை, ஒப்புரவு, இறைஅனுபவ பகிர்வு போன்ற திருவழிபாடுகள் நடைபெற்றன. 75 உறுப்பினர்கள் கலந்துகொண்டு ஆசீர் பெற்றனர். 22 செவ்வாய் ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு உறுப்பினர்களுக்காக செபித்து இறைஆசீரையும் வழங்கினார்கள். குருகுல முதல்வர் அவர்கள் அனைத்து நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்தார்கள். முகாம் மிகுந்த பயனுள்ளதாகவும், தங்களை புதியதொரு இறைவாழ்விற்கு அழைக்கப்பட்டதாகவும், இறைஅனுபவத்தை பெற்றதாகவும் பல மாணவர்கள் சாட்சி பகிர்ந்தார்கள். இம்முகாம் வெற்றிபெற உழைத்த இயக்குநர்கள், ஊக்குவிப்பாளர்கள், பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அனைவருக்கும் நன்றிகள்.



இந்திய அளவில் மிஷன் லீக்கின் துவக்க விழாவானது ஆயர் **மார் ஜார்ஜ் ராஜேந்திரன்** அவர்கள் தலைமையில் மே 24 அன்று நம் மறைமாவட்டத்தில் நடைபெற உள்ளது. அனைத்து மிஷன்லீக் உறுப்பினர்கள், ஊக்குவிப்பாளர்கள், இயக்குநர்கள் கலந்துகொள்ள அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

## மாதா தொலைக்காட்சியில் உங்கள் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாக....

| நிகழ்வுகள் | தொகை | நேரம் |
|---|---|---|
| பிறந்தநாள், திருமணநாள் அறிவிப்பு | 250 | 7.30 AM |
| இறந்தோர் நினைவுநாள் அறிவிப்பு | 300 | 3.00 PM |
| உங்கள் பெயரில் திருப்பலி ஒளிபரப்ப | 5000 | 6.00 PM |
| ஜெபமாலை ஒளிபரப்ப உதவிட | 100 | 10PM/8PM |
| திருவிழா & நிறுவன நிகழ்வுகளை அறிவிக்க | 500 | 30Seconds |
| திருவிழா பங்கு நிகழ்ச்சிகள் ஒளிபரப்ப (சனி,ஞாயிறு 2-3PM &3.30-5.30PM) | 8000 | 30Minutes |

மாதா தொலைக்காட்சியினர் நேரில் வந்து ஒளிப்பதிவு செய்ய கட்டணம் ரூ5000 மற்றும் அவர்களுக்குபோக்குவரத்து, தங்கும் இடவசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

தனிநபர் 30 நிமிட நிகழ்ச்சி வழங்கிட ரூ8000

தினமும் 30 நிமிடம் ரூ5000

இதனுடன் 12.36% சேவை வரியும் செலுத்த வேண்டும். பொதுமொழிப் பெயர்ப்பு விவிலியத்தை மட்டும் பயன்படுத்தி கத்தோலிக்க நம்பிக்கையை வளர்க்க வேண்டும். நிகழ்ச்சிகள் 25 நிமிடம் மட்டுமே அமைய வேண்டும். இறுதி 1 நிமிடம் முகவரி மற்றும் விளம்பரம் இடம்பெறலாம். நிகழ்ச்சியிலோ, விளம்பர நேரத்திலோ மக்களிடம் பணஉதவி கேட்பதோ, வங்கி பண பரிமாற்றத்திற்கான அறிக்கை செய்வதோ தவிர்க்கப்பட வேண்டும்.

மாதா தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளை தந்து மரியின் வழியில் இயேசுவிடம் செல்வோம். மீட்பின் செய்தியை ஊடக வழியில் சொல்வோம்.

**தொடர்புக்கு அருட்தந்தை. தோமஸ் தக்கலை 9486628310**

# Diocesan Convention Collection 2013

| Sl.No | *Place* | *Parish Name* | *Amount* |
|---|---|---|---|
| | | | |
| 1 | Anjugramam | St. Thomas | |
| 2 | Anamughom | St. Mary's | |
| 3 | Anayadi | St. George | 750 |
| 4 | Annikkarai | St. Mathew's | |
| 5 | Arukani | Holy Family | 5,000.00 |
| 6 | Athencode | St. Maria Goretti | |
| 7 | Bengri | St. Benadict's | 2,000.00 |
| 8 | Cheenivilai | Amala Maria | |
| 9 | Chenamcode | Lourdu Matha Mission | 1,000.00 |
| 10 | Chiristurajapuram | Christ the King | 3,000.00 |
| 11 | Kaliyal | St. Mary's | 4000 |
| 12 | Karode | St. Joseph's | 4000 |
| 13 | Kattathurai | St. Micheal's | 4,000.00 |
| 14 | Kalluvilai | Bld. Mother Theresa | 1500 |
| 15 | Kazhuvanthittai | St. Martin de Porres | |
| 16 | Killiyoor | Deva Matha | 5000 |
| 17 | Kulasekaram | John Paul II Mission | 1000 |
| 18 | Malaicode | Holy Cross | 1500 |
| 19 | Manjalumoodu | Little Flower | 5000 |
| 20 | Mankarai | St. James | 5000 |
| 21 | Marappady | St. Thomas | 900 |
| 22 | Marthandam | St. Vincent de Paul | 1000 |
| 23 | Mathapuram | St. Thomas | 1500 |
| 24 | Mezhacode | St. Francies Assisi | 1500 |
| 25 | Mecamandapom | St. Xavier's | 3000 |
| 26 | Mekkarai | St. George | |
| 27 | Mukkoottukal | Holy Family | 3500 |
| 28 | Muzhucode | St. Thomas | |
| 29 | Munchirai | St. George | |
| 30 | Nagercoil | St. Alponsa | 10000 |
| 31 | Netta | St. Thomas | |
| 32 | Nithravilai | Jeyamatha | |
| 33 | Padanthalumoodu | Sacred Heart | 5000 |
| 34 | Palappallam | Christ the King | 5000 |
| 35 | Palugal | St. Thomas | 5000 |
| 36 | Paraicode | Christ the King | 4000 |
| 37 | Pathukani | St. Thomas | |
| 38 | Pallikonam | Sacred Heart | |
| 39 | Perumchilampu | St. Thomas | 1040 |
| 40 | Penu | St. Mary's | 1000 |
| 41 | Pilankalai | Little Flower | 5000 |
| 42 | Pilankarai | Loretto Matha | 4000 |
| 43 | Puliyarai | Little Flower | |
| 44 | Soosaipuram | St. Joseph's | 7000 |
| 45 | Thackalivilai | Holy Family | 2000 |
| 46 | Thadickaramconam | | |
| 47 | Thettiyode | St. Paul's | 4000 |
| 48 | Thettivilai | St. Micheal's | 2000 |
| 49 | Thackalay | St. Mary's | 1000 |
| 50 | Varuthattu | St. Xavier's | |
| 51 | Vayalinkarai | St. Antony's | |
| 52 | Valan nagar | St. Joseph's | |
| 53 | Vanchi Nagar | St. Mary's | |
| | | | |
| | | *Total* | *110190* |

**Fr. Mathew Mulangasseril**
Finance Officer

**Pope Francis**
# TWEETS



**Pope Francis** @Pontifex Apr 14
Holy Week is a good occasion to go to confession and to take up the right path again.

# AIDACT துவக்கவிழா

மாற்றுத்திறனாளிகளின் கல்வி, நலவாழ்வு, மறுவாழ்வு, பாதுகாப்பு போன்ற வாழ்வுரிமைகளைப் பெற்றுத் தரவும், அரசின் கவனத்திற்கு கொண்டுச் செல்லவும் தக்கலை மறைமாவட்டத்தில் சிதறுண்டு கிடக்கும் சிறப்புப் பள்ளிகளை ஒரே குடையின் கீழ் கொண்டுவரவும் வேண்டுமென்ற சீரிய நோக்கோடு ஆயர் மார்.ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்களின் ஆசியோடு கன்னியாகுமரி சமூக சேவை இயக்கத்தின் இயக்குநர் அருட்தந்தை சஜி இலம்பாசேரில் அவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்ட அமைப்பே AIDACT (Association of Institutions for Differently abled Children of Thuckalay என்பதாகும்.

AIDACT ன் தொடக்கவிழா நிகழ்வானது 14.02.2014 திங்கட்கிழமை காலை 10மணியளவில் ஆயர் அவர்கள் தலைமையில் சிறப்புப்பள்ளி ஆசிரியர்களின் இறைவணக்கப்பாடலுடன் கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் ஆரம்பமானது. AIDACT தலைவர் அருட்சகோ.ரோஸ்லின் அவர்கள் வரவேற்க, ஆயர் மற்றும் சிறப்புவிருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி வாழ்த்துரைகளை வழங்கினார்கள். ஆயர் அவர்கள் தனது உரையில், சிறப்புப் பள்ளிகளின் முன்னேற்றத்திற்காக பாடுபடுதல், புதிய திட்டங்கள், முகாம்கள் பற்றி கூறினார். தொடர்ந்து




AIDACT Brochure ஐ ஆயர் வெளியிட AIDACT அறிவுரைக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் ராஜா அவர்கள் பெற்றுக்கொண்டார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை. ஜோஸ் முட்டத்துப்பாடம் , சிறப்பு விருந்தினர் முனைவர் ஜெயச்சந்திரன், குழித்துறை உதவி தொடக்கக் கல்வி அலுவலர் திரு.சாம்ராஜ் அவர்களும் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள்.

அன்றையதினம் ஆயர் அவர்களின் பிறந்த நாள் என்பதால் நிகழ்வில் பிறந்தநாள் கேக் வெட்டி வாழ்த்துப்பாடலும் பாடப்பட்டது. கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை.சஜி எலம்பாசேரில் அவர்கள் பிறந்தநாள் வாழ்த்துச் செய்தி வழங்கினார். இடையிடையே கருணாலயம் சிறப்புப்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. தொடர்ந்து ஐந்து குழுக்கள் பிரிக்கப்பட்டு குறைபாடுள்ள நபர்களுக்கு அளிக்கப்படும் பற்பல சேவைகளின் பட்டியல் என்ற தலைப்பில் விவாதிக்கப்பட்டது. சிறப்பு விருந்தினர் முனைவர் ஜெயச்சந்திரன் Early intervention, MDPS TOOTS குறித்தும் விவாதித்த கருத்துக்களையும் எடுத்துரைத்தார். நிறைவில் AIDACT செயலர் அருட்சகோதரி.ஆன்ஸ் மரியா அவர்கள் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் துவக்கவிழாஇனிதே நிறைவடைந்தது.

---

## நித்திய வார்த்தைப்பாடு

நமது மறைமாவட்டத்தில் மீட்பரின் சகோதரிகள்(SDS) துறவற சபையில் பணியாற்றும் மூன்று அருட்சகோதரிகள் அருட்சகோ. சஜிறோஸ், அருட்சகோ.ரேஸ்மி, அருட்சகோ.கவிதா மற்றும் பிறமறைமாவட்டங்களில் பணியாற்றும் மூன்று அருட்சகோதரிகளாக மொத்தம் ஆறு அருட்சகோதரிகளின் நித்திய வார்த்தைப்பாடு திருநிகழ்வு, வெட்டுர்ணிமடம் கிறிஸ்து நகர் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஏப்ரல் 23



காலை 11.30 மணிக்கு கோட்டாறு மறைமாவட்ட மேதகு ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அருட்சகோதரிகளுக்கு எமது செப வாழ்த்துக்கள்....

## தக்கலை மேய்ப்புப் பணியில் இரு புதுமுத்துக்கள்..

ஏப்ரல் 27ம் நாள் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்களின் கைவைத்தல் வழியாக திருத்தொண்டர்கள் லின்சிலால் மற்றும் செபி மேத்யூ ஆகியோர்கள் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார்கள்.

**அருட்தந்தை.லின்சிலால் மங்கலத்து** அவர்களின் குருத்துவ அருட்பொழிவு காலை 9.30 மணியளவில் இடுக்கி மறைமாவட்டம் வாழத்தோப்பு தூய ஜார்ஜியார் பேராலயத்தில் நடைபெற்றது. முதலில் ஆயர் அவர்களுக்கு ஆடம்பர வரவேற்பு வழங்க பின்னர் புதிய குருவை, ஆயர் மற்றும் குடும்பத்தினர் புடைசூழ ஆலயத் திறு பவனியாக அழைத்து வரப்பட்டார். தொடர்ந்து ஆயர் தலைமையில் குருத்துவ திருச்சடங்குகள் ஆரம்பமாகி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பேரருட்தந்தை ஆன்றணி நரிக்குளம் மறையுரை வழங்கினார். தொடர்ந்து புதிய குருவின் முதல் திருப்பலி நடைபெற்றது.



**அருட்தந்தை.செபி மேத்யூ மணிமலக்கண்டத்தில்** அன்றைய தினம் மதியம் 2.00 மணிக்கு கோதமங்கலம் மறைமாவட்டத்தின் நெல்லிமற்றம் தூய சூசையப்பர் ஆலயத்தில் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார். ஆயர் அவர்களுக்கு புதியகுருவின் பங்கின் சார்பில் ஆடம்பர வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார்.





பேரருட்தந்தை.மாத்யூ சந்திரக்குன்னேல் மறையுரை வழங்க புதிய குருவின் முதல் திருப்பலியும் நடைபெற்றது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் மறைமாவட்ட குருக்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் கலந்துகொண்டு வாழ்த்தினார்.

### திருநிலைப்பாடுகள்

### திருத்தொண்டன்

உதவித் திருத்தொண்டர்கள் அருட்சகோ.ஜோஸ் வயலில் தோமஸ் அட்டையில், அருட்சகோ.ஜோசப் குரியாஸ், அருட்சகோ.தோமஸ் பவ்வத்துமூட்டில், அருட்சகோ.ஆபிரகாம் புத்தன்புரைக்கல், அருட்சகோ.ஜார்ஜ் வலியமடத்தில், அருட்சகோ.ஜேம்ஸ் கனகலில், அருட்சகோ.ஜினு தெக்கேதலக்கல் ஆகியோர்கள் திருத்தொண்டன் திருநிலைப்பாடு ஏப்ரல் 16 அன்று மாலை 5.00 மணிக்கு வயலின்கரை தூய அந்தோணியார் ஆலயத்தில் ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்களால் திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர்.



### காறோயா, ஹெவுப்புதியாக்கோனா, திருஉடை திருநிலைகள்

அருட்சகோதரர்கள்.வினு ஜோசப், ஷிஜோ ஜோஸ் ஐக்காரக்குந்நேல் காறோயாவாகவும், அனில் ராஜ், .அஜின் ஜோஸ், சாமுவேல் ஆகியோர் ஹெவுப்புதியாக்கோனாவாகவும் திருநிலைப்படுத்தப்பட்டனர். சகோதரர்கள் ஜெபனேஷ மற்றும் ஜஸ்டின் கோட்டக்ககம் ஆகியோர்கள் திருஉடைகளும் பெற்றார்கள். இத்திருநிலைப்படுத்தல் ஏப்ரல் 13 அன்று முக்கூட்டுக்கல் இளங்குருமடத்தில் வைத்து நடைபெற்றது.

# குருத்துவ வாழ்வின் பொன்விழா

## 1. அருட்தந்தை.பெர்க்மான்ஸ் கட்டப்புறம் CMI

கோடி அற்புதங்கள் பொழியும் தூய ஜார்ஜியாரின் பாதுகாவலில் ஆன்மீக நெறியில் சிறந்து விளங்கும் எடத்துவாவில் 1933 ஆம் ஆண்டு மே 2ம் நாள் பிறந்த இவர் CMI சபையில் குருமாணவராக பயின்று 1958 மே 16ஆம் நாள் முதல் வார்த்தைப்பாடும் 1964 ல் பங்களூர் உயர் பேராயர் மார் போத்தனாமுறி அவர்களின் கைவைத்தல் வழியாக குருத்துவ அருட்பொழிவும் பெற்றார். பின்னர் முத்தொலி, குரியநாடு, திருவனந்தபுரம்,புளிங்குந்நம், செத்திப்புழ,மாந்நானம், கைனகிரி, நெட்டா ஆகிய இடங்களில் ஆசிரம மேலாளராகவும், பள்ளிக்கூடங்களில் ஆசிரியராகவும், போரூர்கரா நினைவுக் கல்லூரியில் முதல்வராகவும் சிறப்புடன் பணியாற்றினார். தற்போது நெட்டா ஆசிரமத்தின் அதிபராகவும், பங்குத்தந்தையாகவும் செயல்பட்டுவருகின்றார். சுரியானி மொழியில் சிறந்த வல்லுநரும், ஆசிரியரும் ஆவார். குருத்துவப் பொன்விழாவை காணும் தந்தை அவர்களின் இறைபணியை நன்றியோடு நினைத்து அகமகிழ்ந்து அன்போடு வாழ்த்தி, இறைபணிதொடர செபித்து மகிழ்கின்றது தக்கலை மறைமாவட்டம்..



## 2. அருட்தந்தை. சாக்கோ பேசில் வரம்பத்துச்சிறா CMI

CMI சபையிலிருந்து தக்கலை மறைமாவட்டமாக மாற குமரிமிஷன்க்கு கிடைத்த திருத்தொண்டுப்பணியாளர் அருட்தந்தை.ஜேம்ஸ் கோழிமற்றம் அவர்களைத் தொடர்ந்து தொடக்க காலம் முதல் இன்றுவரை தொடர்ந்து குமரிமண்ணில் இறைபணிசெய்து வருபவர் அருட்தந்தை. சாக்கோ பேசில் அவர்கள். அஞ்சா நெஞ்சமும்,



துணிவும், ஆழ்ந்த இறையன்பும் கொண்ட இவர் ------------------------------ 1964 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் நாள் திருத்தந்தை 23 ஆம் ஜாண் அவர்களால் குருத்துவ அருட்பொழிவுபெற்ற பாக்கியவான். கேரளாவில் செத்திப்புழ, குச்சப்புறம் ஆகிய இடங்களிலும், தமிழ்நாட்டில் களியல், முழுக்கோடு, பள்ளிக்கோணம், பிலாங்காலை, காட்டாத்துறை, பரைக்கோடு, மேக்காமண்டபம், அஞ்சுகிராமம், நாகர்கோவில் போன்ற இடங்களில் ஆசிரம அதிபராகவும், மேலாளராகவும், பள்ளிகளுக்கு தாளாளராகவும் இருந்து சிறப்புடன் செயல்பட்டார். கட்டிடக் கலையில் வல்லுநரான இவர் தனது திறமையால் பல்வேறு ஆலயங்கள், பள்ளிக்கூடங்கள், ஆசிரமங்கள் பலவற்றை எளிய முறையில் கட்டியெழுப்பியுள்ளார். அவற்றில் முழுக்கோடு தூய தோமையார் ஆலயம், ஆசிரமம், களியல் பள்ளிக்கூடங்கள் போன்றவை இன்றும் அவரது தியாகத்தையும் பெருமையையும் எடுத்துக்காட்டுகின்றது. ஏழைகள் மீது அன்பு கொண்ட இவர் வின்செந்திய சபை மூலம் பல்வேறு உதவிகளை வழங்கி அவர்களின் வாழ்வு மலர அரும்பாடுபட்டார். ஓசையின்றி பணிசெய்யும் தியாகச்செம்மல். மாணவர் நலனில் அக்கறை கொண்டவர். மறைக்கல்வி மாணவர்கள், ஆசிரியர்களைத் திருப்பயணங்களுக்கு அழைத்து சென்று இறைஅனுவத்தை பகிர்பவர் போன்ற அருங்கொடைகளுக்கு சொந்தகாரர். தந்தை அவர்களின் குருத்துவ வாழ்வின் 50 ஆண்டு நிறைவை கொண்டாடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் மறைமாவட்டம் முழுமனதுடன் வாழ்த்துகின்றது, செபிக்கின்றது...



## துறவற முதல் வார்த்தைப்பாடும் சபை உடை அணிதலும்

ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே. இன்று அக்களிப்போம், அகமகிழ்வோம்.(திபா118-24)

திவ்யநற்கருணை ஆராதனை சபையின் பள்ளிக்கோணம் திருஇருதய ஆலயத்தை சார்ந்த சகோ. சிபியா றோஸ் SABS அவர்கள் மே 4 மதியம் 2 மணியளவில் தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்களின் முன்னிலையில் துறவற வார்த்தைப்பாடு ஏற்று சபை உடையும் அணிந்து கொள்கிறார்கள். இறைபணியை புனிதப்பணியாக ஏற்று துவங்கும் அருட்சகோதரிக்காக செபிப்போம்..

அருட்சகோ. சிபியாறோஸ் அவர்கள் பள்ளிக்கோணம் கும்பளத்துவிளையில் திரு.தங்கப்பன்-திருமதி.ரெத்தினம் அவர்களின் புதல்வியாக 20.04.1983 அன்று பிறந்தார். தொடக்கக் கல்வியை மாத்தூர்கோணத்திலும், மேனிலைக்கல்விகளை அருமனை, களியல் பள்ளிகளிலும் பயின்று 2 ஜூன் 2000 அன்று ஆராதனை சபையில் தன்னை இணைத்துக் கொண்டார்.

## பொன்விழாவில் அருட்சகோதரி. றீசா மாக்தலின்

"ஆண்டவருக்கு நன்றிசெலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர்."

| | | |
|---|---|---|
| பெயர் | : | **அருட்சகோ. றீசா மாக்தலின்** |
| பெற்றோர் | : | திரு.மாத்யூ-திருமதி.மேரி |
| பிறப்பு | : | 01.10.1945 |
| இடம் | : | கேராளவின் செங்களம் |
| பங்கு | : | பாலா மறைமாவட்டம், செங்களம் |
| முதல் வார்த்தைப்பாடு | : | 19.04.1965 |
| கல்விப் பணி | : | விரிவுரையாளர், அமலகிரி(1974-2000) |
| பொறுப்புகள் | : | St.ஷந்தாள் மண்டலத்தலைவி (2008 - 2011) மற்றும் இல்லத் தலைவி |

## வெள்ளிவிழா காணும்அருட்சகோதரிகள்

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | **அருட்சகோ. மார்கிரேட்** |
| பெற்றோர் | : | திரு.கொச்சப்பாவு-திருமதி.மரிய திரேசி |
| பிறப்பு | : | 25.05.1961 |
| இடம் | : | சூசைபுரம், காக்கவிளை |



| | | |
|---|---|---|
| பங்கு | : | தூய சூசையப்பர் ஆலயம், சூசைபுரம் |
| இறைஅழைத்தல் | : | 02.05.1986 |
| முதல் வார்த்தைப்பாடு | : | 16.04.1990 |
| இறைப் பணி | : | வேலூர்(1990-2011) தக்கலை (2012 முதல்) |

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | **அருட்சகோ. மெர்லின் தலவயலில்** |
| பெற்றோர் | : | திரு.அபிரகாம்-திருமதி.எலியம்மாள் |
| பிறப்பு | : | 17.07.1969 |
| இடம் | : | கேரளாவின் சங்஖னாச்சேரி |
| பங்கு | : | புளிக்கக்காவாலா மரியன்னை ஆலயம் |
| இறைஅழைத்தல் | : | 02.06.1985 |
| முதல் வார்த்தைப்பாடு | : | 16.04.1990 |
| இறைப் பணி | : | வேலூர்(1990-1994) தக்கலை (2011 முதல்) |
| பொறுப்புகள் | : | சபை மண்டலப் பொருளாளர் |

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | **அருட்சகோ. றீசா தெக்கேகுன்னேல்** |
| பெற்றோர் | : | திரு.தேவசியா-திருமதி.எலியம்மா |
| பிறப்பு | : | 17.07.1969 |
| இடம் | : | கேரளாவின் சங்஖னாச்சேரி |
| பங்கு | : | கிறிஸ்து அரசர் ஆலயம், ஏற்றுமானூர் |
| இறைஅழைத்தல் | : | 02.06.1985 |
| முதல் வார்த்தைப்பாடு | : | 16.04.1990 |
| இறைப் பணி | : | வேலூர்(1990-2007) தக்கலை (2007முதல்) |
| பொறுப்புகள் | : | மண்டல ஆலேசாகர், ஆசிரியை. |

அருட்சகோதரிகளின் பொன்விழா மற்றும் வெள்ளிவிழா தொடக்க விழாக்கள் தூய சூசையப்பர் ஆலயத்தில் 16.04.2014 அன்று மாலை 5.30 மணிக்கு கொண்டாடப்பட்டது. இறைவன் அருட்சகோதரிகளுக்குஅளித்த நன்மைகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக இவ்வொரு ஆண்டும் நாம் செபிப்போம். பொன்விழா, வெள்ளி விழா வாழ்த்துக்கள்..

# பாதச்சுவடுகளில் ஆசீர் வித்யாலயா

ஆசீர் வித்யாலயா மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கான சிறப்புப்பள்ளி 1991ஆம் ஆண்டு டிசம்பர் 1ம் நாள் நாள் தக்கலை மறைமாவட்டத்தின் களியக்காவிளை அருகில் தெற்றியோடு தூய பவுல் ஆலய வளாகத்தில் கிளாரா சபை அருட்சகோதரிகளால் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் குமரியில் அருட்சகோதரிகள் மறைபணியாற்றிய போது 600க்கும் மேற்பட்டோர் மனவளர்ச்சி குன்றிய நிலையில் இருந்ததை கண்டறிந்தார்கள். இம்மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்ற, 'மன வளர்ச்சி ஒரு குறையல்ல,



பிற இயலாமையைப் போல ஒரு நிலைமட்டுமே, தகுந்த பயிற்சிகள் மூலம் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம்' என்னும் எண்ணத்தில் "இருளிலிருந்து ஒளியை நோக்கி" என்ற தாரக மந்திரத்தோடு ஆலய வளாகத்தில் பள்ளிக்கூடம் கட்டியெழுப்பப்பட்டு செயல்படத் தொடங்கியது. 10 மாணவர்கள் மற்றும் 2 ஆசிரியர்களோடு துவங்கப்பட்ட இப்பள்ளி தற்போது 60 மாணவர்கள் மற்றும் 11 ஊழியர்களுடன் கிளாரா சபை மடம் அருகில் நவீன வசதிகளுடன் புதிய கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றது.

**கல்வி**

சேர்க்கையின் போது மாணவர்களின் அறிவுத்திறன் மதிப்பீடு செய்யப்பட்டு அவரவர் தேவைக்கேற்ப ஓராண்டிற்கான தனிநபர் பாடம் தயாரிக்கப்பட்டு 3 பகுதிகளாக பயிற்சி வழங்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகிறது. பிறர் துணையின்றி தங்கள் தேவைகளை தாங்களே பூர்த்தி செய்ய பயிற்சி, உடல்வளர்ச்சிக்கான விளையாட்டு, உடற்பயிற்சி, பசியோதெரபி போன்றவை வழங்கப்படுகிறது. உடல் ரீதியாக குறைபாடுள்ள மாணவர்களுக்கு நவீன கருவிகளுடன்





பிசியோதெரபி வழங்கப்படுகிறது. மேலும் நடனம், ஓவியம் தீட்டுதல், இசை, பாடல் போன்றவற்றில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மாவட்ட, மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொண்டு ஏராளமான பரிசுகளையும் பெற்றுவருகினறனர்.

**தொழிற்பயிற்சிகள்**

கைத்தொழில் பயிற்சியில் செயற்கைப் பூக்கள், வாழ்த்து அட்டைகள், தொலைபேசி உறைகள், திருமணச் செண்டுகள், சோப், பவுடர், பினாயில், மெழுகுவர்த்தி போன்ற பொருட்கள் செய்ய பயிற்சி அளிக்கப்படுகிறது. இங்கு பயிற்சி முடித்த பல மாணவர்கள் பெற்றோர்களுக்கு உறுதுணையாகவும், கடைகள், வாகனம் பழுதுபார்க்கும் இடங்களிலும் பணியாற்றி வருகின்றார்கள். சாதாரண கல்விக் கூடங்களிலும் பயின்று வருகிறார்கள்.

**விருதுகள்**

குமரி அறிவியல் பேரவையின் அறிவியல் திலகம் விருதினை 2006ஆம் ஆண்டு பெற்று பெருமைசேர்த்தது. மேலும் காமராஜர் விருதையும் பெற்றுள்ளது.

மாணவர்கள் அனுதினமும் வந்து செல்ல பள்ளி வாகனம் இயக்கப்படுகிறது. கொல்லங்கோடு, புதுக்கடை, குழித்துறை, ஆற்றூர் பகுதிகளிலுள்ள மாணவர்கள் பயன்பெறுகிறார்கள். தற்போது இப்பள்ளியின் தாளாளராக கிளாராசபையின் அருட்சகோதரி. ஆல்பி அவர்களும், தலைமையாசிரியையாக அருட்சகோதரி.மரியம்மா தோமஸ் அவர்களும் செயல்பட்டு வருகிறார்கள்.

அருட்சகோ.**மரியம்மா தோமஸ்**
தலைமையாசிரியை

## மஞ்சாலுமூடு, ஆறுகாணி மறைவட்ட உறவிய பொறுப்பாளர்கள் கூட்டம்

மஞ்சாலுமூடு மறைவட்ட ஆலயங்களிலும், ஆறுகாணி மறைவட்ட ஆலயங்களிலும் செயல்பட்டு வரும் உறவியங்களின் பொறுப்பாளர்களின் கூட்டமானது 5-04-14 அன்று மஞ்சாலுமூடு சிறுமலர் மறைவட்ட ஆலயத்தில் வைத்து நடைப்பெற்றது. இதில் இரண்டு மறைவட்டங்களிலிருந்தும் 105 பொறுப்பாளர்கள் கலந்துக் கொண்டனர். இதில் அருட்தந்தை ஜோசப் நெடும்புறம், அருட்தந்தை ஜாண் புதுமனை, பேரருட்தந்தை பீட்டர் கிழக்கேயில் ஆகியோர் பங்கேற்றனர். செபமாலை சொல்லி ஆரம்பிக்கப்பட்ட இக்கூட்டத்தை அருட்தந்தை அனலின் அவர்கள் வழிநடத்தினார். "உறவியம் என்பது நற்செய்தியை மையமாகக் கொண்டு இறையாட்சியின் மதிப்பீடகளான அன்பு, நீதி, உண்மை, சமத்துவம், சகோதரத்துவம் மலர வாழ்வின் எல்லா நிலைகளையும் ஆராய்ந்து செயல் திட்டம் தீட்டி பங்கேற்று ஓர் உறவு சமூகத்தை உருவாக்க முயல்கின்ற சிறு குழு" என்றும், இறைஉறவை வளர்த்தல், தன்னையறிதல், குடும்பங்களை நல்வழிப்படுத்துதல், விசுவாசத்தை ஆழப்படுத்துதல், ஒருவரின் சுமையை இன்னொருவர் இணைந்து சுமப்பது, திருச்சபையிலிருந்து பிரிந்து சென்ற குடும்பங்களை மீட்டுக் கொண்டு வருதல், ஏழைகளுக்கு உதவுதல், வாழ்வு கொடுக்கும் களமாகச் செயல்படுதல், பொதுநிலையினரை பொதுநிலையினரே விசுவாச உளியால் செதுக்குதல், அடுத்திருப்போரை காப்பது போன்றவை உறவியச் செயல்பாடுகள் என்றும் தந்தை அவர்கள் கூறினார்.

### Pope Francis TWEETS



**Pope Francis** @Pontifex Apr 10
Jesus teaches us to not be ashamed of touching human misery, of touching his flesh in our brothers and sisters who suffer. (EG 270)



**Pope Francis** @Pontifex Apr 12
How beautiful it is to stand before the Crucifix, simply to be under the Lord's gaze, so full of love. (EG 264)



## உயிர்ப்பு விழா அனுபவத்தில் வெள்ளாம்பிமலை திருத்தொண்டுத் தளம்


வெள்ளாம்பிமலை தூய மிக்கேல் அதிதூதர் திருத்தொண்டு தளத்தில் உயிர்ப்புத் திருநாள் திருப்பலி 19.04.2014 சனிக்கிழமை அன்று மாலையில் ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக மாலை 5.00 மணிக்கு ஆயர் தலைமையில் பேரருட்தந்தை. மாத்யூ முளங்காசேரில், ஆயர் செயலர் அருட்தந்தை. டோனி மற்றும் பங்குத்தந்தை றோபின் மற்றும் திரு. மரியதாஸ் ஆகியோர்கள் இணைந்து அனைத்து வீடுகளையும் சந்தித்தனர். பின்னர் நடைபெற்ற உயிர்ப்புத் திருநாள் திருப்பலியில் 3 பேர் திருமுழுக்கும், 2 பேர் முதல் திருவிருந்தும் 13 பேர் உறுதிப்பூசுதலும் ஆயரிடமிருந்து பெற்றுக்கொண்டனர். ஒரு பெண்மணிக்கு திருமண வார்த்தைப்பாடும் நடைபெற்றது. தொடர்ந்து மலைப்பகுதியில் சுமார் 3 கிலோமீட்டர் தூரம் உயிர்ப்புப் பவனியும் நடைபெற்றது. இறைபக்திஉணர்வுடன் நடைபெற்ற இந்நிகழ்வின் இறுதியில் அனைவருக்கும் இரவுணவும் வழங்கப்பட்டது.

அருட்தந்தை. **றோபின் கூறுமுள்ளில்**
பங்குத்தந்தை.

### Family Appostalate

குடும்ப வாழ்வின் **மறுமலர்ச்சி தியானம்** மேய் 30, 31, ஜீன் 1 ஆகிய மூன்று நாட்கள் கல்லுவிளை ஆசீர் .அரங்கத்தில் தினமும் காலை 9.30 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெறுகிறது. செய்திகள் தமிழ், மலையாளம் மொழிகளில் வழங்கப்படும். கலந்துகொண்டு பயன்பெற அன்பாய் அழைக்கின்றோம்.

### Pope Francis TWEETS



**Pope Francis** @Pontifex Apr 29
Who among us can presume to be free of sin? No one. Let us ask God to forgive our sins.

# புனித வின்செனட் தே பவுல்

புனித வின்செனட் தே பவுல் சபை குமரி மண்ணில் காலூன்றி தன் பணியை 50 ஆண்டுகள் நிறைவு செய்ததன் பொன்விழா15.2.2013 அன்று நடைபெற இருக்க அருட்தந்தை. தோமஸ் தெக்கேல் அவர்களின் மறைவின் காரணமாக மாற்றிவைக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. இந்நிகழ்வுகள் அனைத்தும் 18.05.2014 ஆயர் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணிமுதல் படந்தாலுமூடு திருஇருதய ஆலயத்தில் நடைபெற உள்ளது. பொன்விழா நிகழ்வுகளில் மறைமாவட்ட மக்கள் யாவரும் கலந்துகொண்டு 50 ஆண்டுகள் வின்செந்தியர்கள் நமது மறைமாவட்ட பகுதிகளில் செய்த அனைத்து பிறரன்பு பணிகளை நினைவு கூர்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்தவும், வின்செந்தியர்களின் மகிழ்வை பகிர்ந்து கொள்ளவும் அனைவரையும் அன்பாய் அழைக்கிறோம்.

அன்புடன்,

வின்செந்தியர்கள

**நிகழ்வுகள்**

காலை 9.00 மணி : திருப்பலி

தலைமை : மேதகு ஆயர் **மார் ஜார்ஜ் ராஜேந்திரன்**

10.30 மணி : விவிலியப் பவனி

11.00 மணி : பொதுக்கூட்டம்

தலைமை : **மேதகு ஆயர்** அவர்கள்

வரவேற்புரை : சகோ.**மணிவண்ணன்** (தலைமைப் பணியாளர்)

சிறப்புரை : சகோ.**ஜோசப் பாண்டியன்**

(பன்னாட்டு மண்டல துணைத்தலைவர், மேற்கு ஆசியா)

: சகோ.**வின்சென்ட்**

(ஒருங்கிணைப்பாளர், தமிழக மண்டல சபை)

**"பொன்விழா காருண்யா உதவி நிதி நிறுவுதல்"**

துவக்கி வைப்பவர் : பேரருட்தந்தை. **ஜோஸ் முட்டத்துப்பாடம்**

(குருகுல முதல்வர் மற்றும் ஆன்மீக ஆலோசகர்)

பாராட்டுரை : பேரருட்தந்தை.**ஆன்றணி ஜோஸ்**

(முதன்மைத் தந்தை, சூசைபுரம் மறைவட்டம், தாளாளர், தூய அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி)

ஏற்புரை : பேரருட்தந்தை.**தோமஸ் முட்டத்துக்குன்னேல்**

(மத்திய சபையின் முதல் ஆன்மீக ஆலோசகர்)

**பொன்விழா மலர் வெளியிடல்**

மதியம் 1.30 மணி : **உறவின் விருந்து**

2.30 மணி : கடந்து வந்த பாதையை நினைவு கூறும்

**கலை நிகழ்ச்சிகள் மற்றும் காணொலித் தொகுப்புகள்**


நன்றியுரை : சகோ.**ஜோஸ்** (துணைத்தலைவர்)

## திட்ட உதவி வழங்குதல்

பரைக்கோடு கிறிஸ்து அரசர் கிளைச்சபையினர் 30.4.2014 அன்று மாலை 5.00 மணிக்கு ஆன்மீக ஆலோசகர் அருட்திரு.ஜாண் புதுமனை அவர்கள் தலைமையில் 11 பயனாளிகளுக்கு சுய தொழில் செய்வதற்கு கடனுதவியாக ரூபாய் ஒரு லட்சத்து ஐயாயிரம் சுழற்சித் திட்டத்தின் கீழ் வழங்கினர்.


---

## Pope Francis TWEETS




**Pope Francis** @Pontifex Apr 15

Each encounter with Jesus changes our life.



**Pope Francis** @Pontifex Apr 18

It is not easy to follow Jesus closely, because the path he chooses is the way of the Cross.



**Pope Francis** @Pontifex Apr 26

None of us can think we are exempt from concern for the poor and for social justice (EG 201).

## விரைவில் தூய அல்போன்சா கல்லூரி..

தூய அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி சூசைபுரத்தில் வரும் 2014-15 ஆம் கல்வியாண்டில் துவங்குவதற்கான இறுதி கட்ட வேலைகள் விரைவாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஜுன் மாதம் முதல் செயல்பட இருக்கின்றது. இதற்காக மறைமாவட்ட மக்கள் அனைவரும் செபித்து வருகின்றார்கள். அனைத்து பங்குகளிலும் செப அட்டைகளும் வழங்கப்பட்டுவருகின்றன. விளம்பரக் குழுவினர் தங்கள் பணிகளை குழுக்களாக பிரிந்து செயல்படுத்தி வருகின்றனர். கட்டிட வேலைகளும் நடைபெற்று வருகின்றன. கல்லூரி பற்றிய சிறு குறிப்பு(Browchure) அனைத்து பங்குகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. கல்லூரி பணிகள் விரைவாய் நடைபெற நாமும் செபிப்போம்.....

## தூய மரியகொரற்றி மழலையர் பள்ளி ஆண்டுவிழா

அதங்கோடு தூய மரியகொரற்றி ஆலயத்தில் செயல்படும் தூய மரியகொரற்றி மழலையர் பள்ளியின் 2013-2014 ஆம் ஆண்டு விழா ஏப்ரல் 22 மதியம் 2 மணிக்கு தாளாளர் அருட்தந்தை.டோஜி பறம்பில் பறம்பில் அவர்கள் தலைமையில் மழலையர்பள்ளி பெற்றோர்களின் இறைவணக்கத்துடன் ஆரம்பமானது. பள்ளி ஆண்டறிக்கையை ஆசிரியை திருமதி.ஸ்டெல்லா அவர்களும், பெற்றோர் ஆசிரியர் இயக்க அறிக்கையை திருமதி.சோபியா அவர்களும் சமர்ப்பித்தனர். சிறப்பு விருந்தினராக ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி. மரியா அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மழலை மொழி பேசும் சின்னஞ்சிட்டுக்களின் மழலைப்பாட்டு, பேச்சு, நடனம், கதைசொல்லுதல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அருட்தந்தை. டோஜி அவர்கள் தலைமையுரை ஆற்றி பரிசுகளை வழங்கினார். மதியம் பெற்றோர்கள் ஒருங்கிணைத்த அன்பின் விருந்தும் நடைபெற்றது. இறுதியில் திருமதி. சிந்து அவர்கள் நன்றி நவில நாட்டுப்பண்ணுடன் மாலை 5.30 மணியளவில் இனிதே நிறைவடைந்தது.

திருமதி.**ஸ்டெல்லா**
ஆசிரியை



# பாதுகாவலர் திருவிழாக்கள்

### தூய சூசையப்பர் மறைவட்ட ஆலயம், சூசைபுரம்

தூய சூசையப்பர் மறைவட்ட ஆலய திருவிழாவானது ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாள் தொடங்கி மே 5ஆம் நாள் நிறைவடைய இருக்கிறது. குருகுல முதல்வர் அவர்களின் தலைமையில் 9 நபர்களுக்கு முதல் திருவிருந்து திருநிகழ்வு நடைபெறுகின்றது. பங்கின் சார்பில் சூசையான் என்னும் குடும்ப மலர் வெளியிடப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை புதியகுரு அருட்தந்தை.வின்சிலால் மங்கலத்து அவர்கள் திருப்பலி நிறைவேற்றுகிறார்கள். மேலும் மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டுவிழாக்களும், பல்வேறு கலைநிகழ்சிகளும் நடைபெறுகின்றன. விழா நிகழ்வுகளை வட்டார முதன்மை தந்தையும் பங்குத்தந்தையுமான அருட்திரு.ஆன்றணி ஜோஸ் மற்றும் விழாக்குழுவினர் இணைந்து செய்து வருகின்றார்கள்.

### திருக்குடும்ப ஆலயம்,முக்கூட்டுக்கல்

ஏப்ரல் 25 அன்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. டிவைன் தியானக்குழுவினர் நற்செய்தி வழங்குகிறார்கள். புதன் மற்றும் வியாழன் ஆகிய இருநாட்கள் உறவியங்களின் ஆண்டுவிழாக்களும், வெள்ளி மாலை திருப்பலிக்குப்பின் திருப்பவனியும், வாணவேடிக்கை நிகழ்வும் நடைபெறுகின்றது. நிறைவு நாளில் ஆயர் அவர்களின் ஆடம்பரக் கூட்டுத் திருப்பலியுடன் அன்பின் விருந்து நிகழ்வும் நடைபெறுகின்றது. விழா ஏற்பாடுகளை அருட்தந்தை. ஜேக்கப் ஐயமாத்திர அவர்கள் விழாக்குழுவோடு செய்து வருகிறார்கள்.

### புனித சூசையப்பர் ஆலயம், காரோடு

ஏப்ரல் 30 அன்று ஆயரின் திருப்பலியுடன் ஆரம்பமாகி மேய் 4 வரை நடைபெறுகின்றது. பக்த இயக்கங்கள், உறவியங்களின் ஆண்டுவிழாக்களும் நடைபெறுகின்றது.

### புனித தோமையார் ஆலயம், மாறப்பாடி

புனித தோமையார் ஆலய குடும்பவிழா மேய் 12 முதல் 16 வரை நடைபெறுகிறது.உறவியங்களின் ஆண்டுவிழா மற்றும் பல்வேறு

கலைநிகழ்வுகளும் நடைபெறுகின்றது.

### திரு இருதய ஆலயம், பள்ளிக்கோணம்


பள்ளிக்கோணம் திரு இருதய ஆலயத் திருவிழா ஏப்ரல் 30 முதல் மேய் 4 வரை நடைபெறுகின்றது. மேய் 4 மாலை அருள் சகோ. சிபியா றோஸ் அவர்களின் திருநிலைப்பாடு மற்றும் திருவிழா சிறப்புத் திருப்பலியில் ஆயர் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார். புதிதாக கட்டப்பட்ட குரோட்டோவும் ஆயரால் அர்ச்சிக்கப்படுகிறது.

### புனித தோமையார் ஆலயம், முழுக்கோடு


முழுக்கோடு புனித தோமையார் ஆலயத் திருவிழா மேய் 11 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மே18 நிறைவடைகின்றது. மேய் 11 அன்று அருள்திரு சாக்கோ பேசில் அடிகளாரின் குருத்துவ பொன் விழா சிறப்பிக்கப்படுகின்றது, மேய் 18 மாலை திருவிழா சிறப்புதிருப்பலியில் ஆயர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார்.

---


## Pope Francis TWEETS




**Pope Francis** @Pontifex Apr 19
Please join me in praying for the victims of the ferry disaster in Korea and their families.



**Pope Francis** @Pontifex Apr 21
Each encounter with Jesus fills us with joy, with that deep joy which only God can give.



**Pope Francis** @Pontifex Apr 24
A simple lifestyle is good for us, helping us to better share with those in need.



**Pope Francis** @Pontifex Apr 25
We must not let ourselves fall into the vortex of pessimism. Faith can move mountains!



### மே மாத சிறப்பு நிகழ்வுகள்

### VBS


1. புனித மரியன்னை ஆலயம், அணைமுகம்- 5 முதல் 10 வரை
2. புனித தோமையார் ஆலயம், பத்துகாணி- 12 முதல் 17 வரை
3. புனித தோமையார் ஆலயம், மாறப்பாடி - 5 முதல் 10 வரை
4. புனித மரிய கொரற்றி ஆலயம், அதங்கோடு - 11 முதல் 18 வரை
4. சிறுமலர் மறைவட்டஆலயம், மஞ்சாலுமூடு -5 முதல் 11 வரை
5. புனித மரியன்னை ஆலயம் களியல்

மே 8 மாலை பங்குத்தந்தை அருள் திரு. சாக்கோ பேசில் அடிகளின் குருத்துவ பொன் விழா கொண்டாட்டம்.

| | | |
|---|---|---|
| மே 2,3 | - | மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான VBS பயிற்சி |
| 3 | - | கைக்காரர்கள், கணக்கர்கள் - கூட்டம் |
| 4 | - | மறைக்கல்வி மாணவர் கல்வி உதவித் தேர்வு இறைஅழைத்தல் முகாம் தொடக்கம் |
| 6 | - | அருள்பணிப் பேரவை கூட்டம் - சங்கமம் |
| 8,9,10 | - | SMCS ஆசிரியர்களுக்கு புத்தாக்கப்பயிற்சி |
| | - | CML-ன் மாநில நிர்வாகக் குழு கூட்டம் ஓய்வு பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு பிரியாவிடை |
| | - | VP வந்துபாருங்கள், தியானம் பளுகல் |
| 11 | - | இறை அழைத்தல் ஞாயிறு |
| 13 | - | அருள்தந்தையர்களின் மறைவட்ட கூட்டம் |
| 16,17,18 | - | திருமண ஆயத்தப் பயிற்சி முகாம் |
| | - | புனித வின்சென்ட் தே பவுல் சபை பொன்விழா 16-ஆம் ஆண்டுவிழா |
| 30 | - | குழந்தை ஈசோ இயக்க ஆண்டுவிழா |

---

## Pope Francis TWEETS



**Pope Francis** @Pontifex Apr 28
Inequality is the root of social evil.

## சீறோ மலபார் திருச்சபையின் தமிழக பிதாமகன்

### முன்னுரை

"நீண்ட தாடியும் தோள்பட்டை வரை வளர்ந்த தலைமுடியும் வாட்டசாட்டமுமான உருவமைப்பும் கனிந்த பார்வையும் கொண்ட நாடோடிப் போதகர் பாலஸ்தீனா நாடெங்கும் போதித்து கொண்டே இருக்கிறார்" என்று யூதேயா ஆளுநராக இருந்த லெந்திலியுஸ் பெப்டலியுஸ் என்ற ஆளுநன் உரோமை பேரரசனுக்கு இயேசு நாதரைக் குறித்து எழுதினார். அதுபோன்று 1960 களில் சுமார் 6 அடி உயரமும் வெங்கல குரலொலியும் வெட்டிச் சிரிப்பும் கனிந்த பார்வையும் இரக்க குணமும் அன்னை மரியாள் பக்தியும் நற்செய்தி அறிவிக்கும் வள்ளன்மையும் செபத்தால் நோயும் பேயும் ஓட்டும் வன்மையும் கொண்டு மலையாள பாதிரியார் குமரி மாவட்டத்து - நித்திரவிளை, பாஞ்சிவிளை, காக்கவிளை போன்ற இடங்களில் நடந்து திரிந்தார். அவரே சீரோமலபார் திருச்சபையின் தமிழக பிதாமகன் இரண்டாம் தோமையார் 'வலியச்சன்' என்று வாயார வாழ்த்தப்பட்ட அருட்தந்தை சகறியாஸ் காயித்தறை அடிகளார்.

### ஏன்? எதற்கு?

1955-ல் பத்திநாதர் 12 பாப்பானவர் "முல்தோரும் பிடலியும்" என்னும் ஆணையின் மூலம் சங்கனாச்சேரி மறைமாவட்டத்தின் எல்கை பம்பா நதிக்கு வடக்கும் தெற்கே கன்னியாகுமரி வரையிலும் நீடிக்கப்பட்டது. இதன் விளைவாய் அருட்தந்தை தோமஸ் நங்நச்சிவீட்டில் அவர்கள் குமரிமாவட்டத்துக்கு அனுப்பப்பட்டு இப்பகுதி மக்களின் நிலைமைகள் படித்து அறிக்கை மறைமாநிலத்திற்கு ஒப்படைக்க, குருகுல முதல்வர் சிற்றூர் அடிகளார், கிரிகோரி தச்சேரி அடிகளார் மற்றும் ஆன்றணி காயத்தற அடிகளாரும் சகறியாஸ் அடிகளாரை அணுகி குமரிமாவட்டத்தில் சீறோமலபார் திருச்சபையின் மேய்ப்புப்பணி மேற்கொண்டிட அறிவுறுத்தினர். "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை மகன் தூய ஆவி பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்............ இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" (மத்தேயு 28/19) என்ற



ஆண்டவர் இயேசுவின் வார்த்தைக்கு பணிந்து நற்செய்தி தீபத்தை ஏந்தி தமிழக குமரி மண்ணிற்கு வந்தார் அருட்தந்தை சகறியாஸ் காயித்தறை அடிகளார்.

### பிறப்பும் கல்வியும்

கேரளத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் குட்ட நாட்டின் சேனாங்கரி பங்கில் காயித்தறை தோமஸ் ஏலிக்குட்டி தம்பதியரின் நான்காவது மகனாக 1924 செப்டம்பர் 14-ம் தியதி பிறந்தவரே அருட்தந்தை சகறியாஸ் காயித்தறை அவர்கள். சேனர்கரி தோட்டுகடவில் ஆரமபபள்ளியிலும் கைனகரி நடுநிலைப் பள்ளியிலும் பயின்று உயர்நிலை படிப்பை புனித பயஸ் கட்டானம் உயர்நிலை பள்ளியிலும் படித்தார். பின்னர் கோட்டயம் மைனர் குருத்துவ செமினாரியிலும் மேல்நிலை குருத்துவப் பயிற்சி மங்கலப்புழ போண்டிபிகல் செமினாரியிலும் படித்து 1953 டிசம்பர் 2-ம் தியதி குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

### பணியாற்றிய பங்குகள்

சங்கனாச்சேரி மறை மாவட்டத்து தந்தம்பள்ளி புனித மிக்கேல் ஆலயத்தின் துணை பங்குத்தந்தையாகவும் ஆரியங்காவு புனித மரியாள் ஆலய பங்குத்தந்தையாகவும் கன்னியாகுமரி மாவட்டத்தின் 12 மறைபரப்பு தளங்களில் நிறுவனராகவும் திருவனந்தபுரம் லூர்து ஆலயத்தின் மறைவட்ட குருகுல முதல்வராகவும் காவாலம் புனித தெரசாள் ஆலய பங்கு தந்தையாகவும், சம்பக்குளம் மறைவட்ட குருகுல முதல்வராகவும் சங்கனாசேரி கத்தீட்ரல் பேராலய பங்கு தந்தையாகவும் புளிங்குந்நு மறைவட்ட குருகுல முதல்வராகவும் மீண்டும் குமரிமாவட்ட புரோட்டோபிரஸ்பித்தராகவும் கோட்டயம் தாழந்தங்ஙாடி திரு இருதய பங்கு தந்தையாகவும் பணியாற்றினார். 50 ஆண்டுகள் இறைவனுக்கு பணிபுரிந்த அவர் பொழிந்த முத்துக்கள், "இயேசுவே நன்றி! இயேசுவே ஸ்துதி".

### குமரியில் பணிகள்

1960 செப்டம்பர் 18-ஆம் நாள் 68 பேருக்கு திருமுழுக்கு அளித்து நித்திரவிளை ஜெயமாதா ஆலயம் உருவாக்கினார். சீரோ

மலபார் திருச்சபையின் முதல் ஆலயம் அது. துணை நின்றவர்கள் மோன்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞ்ஞாலில் அடிகளார், உத்தரிய முத்து ஆசிரியர், கிராத்தூர் ஜோஸ்வா போன்ற பெரியவர்கள்.

1960-ல் பாஞ்சிவிளையில் 21 பேருக்கு திருமுழுக்கு அளித்து திரு இருதய ஆலயம் அமைய செய்தார். துணையாளர்கள் பெரியவர் உத்தரிய முத்து ஆசிரியர், திரு. அகஸ்டின் போன்றவர்கள்.

1960-ல் காக்கவிளையில் 5 பேருக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டு புனித சூசையப்பர் ஆலயம் உருவாக்கப்பட்டது. துணை நின்றவர் பெரியவர் கபிரியேல் நாடார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்.

9-6-1962-ல் பளுகல் புனித தோமையார் ஆலயம் உருவானது. வழிகாட்டியவர் திரு. எலியாசர் என்ற தபால்காரர்.

5-8-1962 வயலின்கரை புனித அந்தோணியார் ஆலயம் 73 பேருக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டு உதயமானது. துணை செய்தவர் பெரியவர் குமாரன் என்ற முன்னாள் இராணுவத்தினர்.

1962-ல் வாறுதட்டில் புனித சவேரியார் ஆலயம் உருவானது.

23-4-1962-ல் மஞ்சாலுமூட்டில் 27 பேருக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டு சிறு மலர் ஆலயம் உருவானது. திரு. சங்கரன் என்பவர் துணையாக இருந்தார்.

1963-ம் ஆண்டு CMI சபையை சார்ந்த குருக்களை அழைத்து வந்து களியல் மற்றும் சுற்றுவட்டாரங்களில் சீரோ மலபார் சபைகள் உருவாக வழிவகுத்தார்.

15-7-1971-ல் 65 பேருக்கு திருமுழுக்கு அளித்து புனித ஜார்ஜியார் ஆலயம் குன்னத்தூரில் நிறுவப்பட்டது.

1963-ம் ஆண்டில் சகறியாஸ் அடிகளார் தெற்றியோடில் கண்ட கனவு 1972-ல் ஆகஸ்டு 15-ம் தியதி 78 பேர் திருமுழுக்கு பெற்ற புனித பவுல் ஆலயம் உருவானது.

1972-ம் ஆண்டு நவம்பர் 5-ம் தியதி 63 பேர் திருமுழுக்கு பெற்ற மாங்கரையில் புனித யாகப்பர் ஆலயம் உருவாக அருட்தந்தை தோமஸ் முட்டத்துகுற்நேல் அடிகளாருடன் அருட்தந்தை சகறியாஸ் காயித்தறை சேர்ந்து பாடுபட்டார்.

மஞ்காலுமூடு தெற்றிவிளையில் ஆலயம் அமைய அருட்தந்தை ஜோசப் மடத்தில் அடிகளாருடன் சகறியாஸ் காயித்தறை அடிகளார் பாடுபட்டார். காரோடு திருத்தொண்டு நிலையத்திற்கும் அவருடைய பங்களிப்பு மிக உத்வேகம் அளிப்பதாக இருந்தது.



1985 முதல் 1987 வரை படந்தாலுமூடு தலைமையிடமாகக் கொண்டு குமரி மறைபரப்பு தளங்களில் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு சீரோ மலபார் திருச்சபை வளர்ந்திட கடுமையாக உழைத்தார்.

**உடன் பணியாளர்கள்**

a) பேராயர்கள்:- மார் மாத்யூ காவுகாட், மார் ஆன்றணி படியற, மார் ஜோசப் பௌவத்தில்.

b) துணை நின்ற அருட்தந்தையர்கள்:- தோமஸ் முட்டத்துகுந்நேல் அடிகளார், தோமஸ் வீட்டுவேலிக்குந்நேல் அடிகளார், ஜோசப் மடத்தில் அடிகளார், மாத்யூ வயலிங்கல் அடிகளார், CMI சபையை சார்ந்த வலேரியூஸ் அடிகளார், ஜேம்ஸ் ஜோசப் அடிகளார், செபாஸ்டியன் மஞ்சேரிகளம் அடிகளார், ஜாண் தெக்கேல் அடிகளார், மாத்யூ வடக்கேமுறியில் அடிகளார்.

c) உடன் உழைத்த அருட்சகோதரிகள் சமூகம்

1965 முதல் திரு. இருதய சகோதரிகள்

1973 முதல் SDS சகோதரிகள்

1970 முதல் OMMI சகோதரிகள் மற்றும் CMC சகோதரிகள்

**பணிமுறைகள்**

a) வாழ்வாலும் வார்த்தையாலும் நற்செய்தி அறிவித்தார்.

b) ஜெபமாலை, நற்கருணை பக்தி ஊக்குவித்தார். மற்றும் குடும்ப சந்திப்பு, ஜெபக்கூட்டங்கள், நோயாளிகள் சந்திப்பு தினசரி மேற்கொண்டார்.

c) கத்ததோலிக்கர் நிவாரண சங்கம்(கொச்சின் மண்டலம்) மூலம் ஏழைகட்கு உணவு உடை உறையுள் வழங்கினார்.

d) பாலர் பள்ளிகள் ஆரம்பிக்கச் செய்து இளம்சிறார் கல்விக்கு ஊக்கமளித்தார்.

e) சுத்தம் சுகாதாரம் வளர்த்திட அரும்பாடுபட்டார்.

f) மூடநம்பிக்கைகளை களைந்திட "பேய்களை நான் ஓட்டுவேன். நோய்க்கு மருத்துவரை நாடுங்கள்" என்று அறிவுரை வழங்கி சாதி சமய வேறுபாடின்றி திறந்த வெளியிலும் தன்னை நாடி வந்தோருக்கு செபம் செய்து அறிபுதங்கள் நிகழ்த்தி காட்டினார்.

g) குழந்தைகளை பள்ளிகூடங்கட்கு அனுப்ப அறிவுறுத்தவும் பாடசாலைகளை திறக்கவும் முயற்சிகள் மேற்கொண்டார்.

h) கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் (KKSSS) வின்சென்ட் தே பவுல் சங்கம் மற்றும் பக்த இயக்கங்கள் தொடங்கி நடத்திட ஊக்கம் அளித்தார்.

**PIONEER OF MISSION**

தக்கலை மறைமாவட்டம் உருவானபின் தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் அவரது பொன்விழா ஆண்டில் அவரை வரவழைத்து 'PIONEER OF MISSION' என்னும் விருது வழங்கி அவரை கௌரவித்தார்.

**வாழ்வின் இறுதி நாட்கள்**

தாழத்தங்காடி திரு இருதய ஆலய பங்குதந்தையாக இருந்து 2002 பெப்ரவரி 19-ம் நாள் ஓய்வு பெற்று இத்தித்தானம் குருக்கள் ஓய்வு இல்லத்தில் ஓய்வில் இருக்கவே 2004 செப்டம்பர் 30-ம் நாள் இறைமகன் இயேசுவின் திருவடியில் தன் ஆன்மாவை ஒப்படைத்தார். "நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்; என் ஓட்டத்தை முடித்துக் கொண்டேன்; விசுவாசத்ததைக் காத்துக் கொண்டேன்; இனி எனக்கென்று வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றிவாகையே. அதை இறுதி நாளில் ஆண்டவர் எனக்கு தருவார்"(2 திமத்தேயு 4/7).

**முடிவுரை**

50 ஆண்டு திருப்பலி வாழ்வில் வெகு இளம் பருவத்தில் மொழி கலாச்சாரம் மாறுபட்ட பகுதியாகிய தமிழக குமரி மாவட்டத்தில் சீரோமலபார் திருச்சபையை வீரதீரத்துடன் போராடி நிறுவியவர் திருச்சபையின் பிதா மகன் அருட்தந்தை சகரியாஸ் காயித்தறை அடிகளார். அவரது இறுதிச் சடங்கில் உரையாற்றிய கார்டினல் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி பேராயர், "நான் ஒன்றும் செய்யவில்லை; ஈசோவின் கையில் நான் ஒரு கருவியானேன் என்று தன்னை பணிவாக வெளிப்படுத்தினார் காயித்தறை அடிகளார" என்று கூறியது அவர் எவ்வளவு மேன்மையானவர் என்பதைக் காட்டியது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். (திருக்குறள்)


திரு.சுகுமாரன்,
வயலன்கரை



# புனித வார நிகழ்வுகள்

**சிறுமலர் மறைவட்ட ஆலயம், மஞ்சாலுமூடு.**

புனித வார திருச்சடங்குகளின் ஆயத்தமாக ஏப்ரல் 10,11-ம் தியதிகளின் குரு மாணவர்கள் அனைத்து வீடுகளையும் சந்தித்தனர். 10-ம் தியதி ஆறு உறவியங்கள் இணைந்து ஆலய வளாகத்திலும் ஏப்ரல் 11-ம் தியதி மூன்று உறவியங்கள் இணைந்து திரு. செல்வன் இல்லத்திலும் மூனறு உறவியங்கள் இணைந்து திரு. மோகன் ராஜ் இல்லத்திலும் வைத்து தியானம் குரு மாணவர்களால் நடத்தப்பட்டது.

**ஓசானா ஞாயிறு(13-04-2014)**

ஓசானா ஞாயிறு திருவழிபாடானது தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் Sdb அவர்கள் தலைமையில் SDS கன்னியர் இல்லத்தில் தொடக்க வழிபாட்டு திருப்பலியுடன் ஆரம்பிக்கப்பட்டு, குருத்தோலை கையில் ஏந்தி பவனியாக ஆலயத்தில் வந்தடைந்தது. திருப்பலி முடிந்தபின் ஆயர் அவர்கள் மறைக்கல்வி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார். அன்று மாலை 4.00 மணியளவில் அருட்தந்தை லூக்கா CMI, அருட்தந்தை ஆல்பர்ட் CMI அவர்கள் தலைமையில் நற்கருணை ஆராதனை, தியானம், பாவசங்கீர்த்தனம் வழங்குதல் நடைபெற்றது.



**பெசகா வியாழன்(17-04-2014)**

பேரருட்தந்தை பீட்டர் கிழக்கேயில் தலைமையில், திருத்தொண்டன் பிரின்டோ இணைந்து இயேசுவின் தலைமைப் பண்பாகிய பாதம் கழுவுதல் நிகழ்வை திருப்பலியுடன் நிறைவேற்றினார். திருப்பலி முடிந்த பின் நற்கருணை ஆராதனை நடைப்பெற்றது.

## புனித வெள்ளி

காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரை உறவிய மக்கள் நற்கருணை ஆராதனை நடத்தினார்கள். 10 மணிக்கு அனைத்து உறவிய மக்களும் இணைந்து ஆராதனை செய்தனர். 11.00 மணிக்கு பேரருட் தந்தை மாத்யூ குழிஞ்ஞாலில் அவர்கள் தலைமையில் திருப்பாடுகளின் திருச்சடங்குகள் ஆரம்பமானது. திருப்பாடுகளை நினைவு கூர்ந்த பிற்பாடு இயேசுவின் திருச் சொரூபம் ஏந்திய பவனி ஆலயத்தை வலம் வந்து பெரிய நுழைவாயில் வழியாக ஆலயத்தை சென்றடைந்தது.



மாலை 3.00 மணியளவில் மாலைக்கோடு திருச்சிலுவை ஆலய மக்களும், மஞ்சாலுமூடு சிறுமலர் ஆலய மக்களும் இணைந்து நடத்திய சிலுவைப்பாதை, சிறுமலர் ஆலய வளாகத்தில் ஆரம்பிக்கபட்டு திருச்சிலுவை ஆலயவளாகத்தில் சென்றடைந்தது. டீக்கன். பிரின்டோ அவர்கள் மஞ்சாலுமூடு சந்திப்பிலும், டீக்கன் அவர்கள் மாலைக்கோடு சந்திப்பிலும் கிறிஸ்துவின் பாடுகளையும், வாழ்வில் வரும் துயர்களையும், அதை ஏற்றுக் கொள்ளும் வழிமுறைகளையும் குறித்து அழகாக மறையுரையாற்றினார்கள். திருச்சிலுவை, ஆலயத்தை வந்தடைந்தப்பின் பேரருட்தந்தை பீட்டர் கிழக்கேயில் அவர்கள் இறுதி ஆசீர் வழங்கினர்.

## உயிர்ப்பு ஞாயிறு

பேரருட்தந்தை பீட்டர் கிழக்கேயில் அவர்கள் தலைமையில் அதிகாலை 2.30 மணிக்கு உயிர்ப்பு திருச்சடங்குகள் மற்றும் திருப்பலி நடைப்பெற்றது. திருத்தொண்டன் பிரின்டோ அவர்கள் உயிர்ப்பின் முக்கியத்துவத்தை குறித்து மறையுரையாற்றினார்.



## சீரோ மலபார் திருச்சபையிலிருந்து இரண்டு புனிதர்கள்: சிறு வாழ்க்கைக் குறிப்பு.

*அருளாளர் எவுப்ராசியாம்மா* (திருநாள்: ஆகஸ்ட் 29)

அருட்சகோதரி திருஇருதய எவுப்பராசியா, றோசா எலவத்திங்கல் என்னும் இயற்பெயருடன் 1877 ஆம் ஆண்டு திருச்சூரில், எடத்துருத்தி (ஒல்லூர்) என்னும் இடத்தில் பிறந்தார். இவர் கார்மல் அன்னை (சி.எம்.சி) துறவற சபையில் சேர்ந்து 1900 ஆம் ஆண்டு முதல் வார்த்தைப்பாட்டை ஏற்றார். திரு இருதய ஆண்டவரிடம் அதீத பக்தி கொண்டிருந்த இச்சகோதரி நீண்ட நேரம் இயேசுவிடம் உரையாடுவதில் ஈடுபட்டார். அதனால் மக்கள் அவரை 'செபிக்கும் அன்னை' எனச் செல்லமாக அழைத்தார்கள். கன்னியர் இல்லத்தின் சிற்றாலயத்தில், நற்கருணை ஆண்டவரின் முன்னிலையில் நீண்ட நேரம் செலவிட்ட அவர் நற்கருணை ஆண்டவரின் தீரா பக்தராக விளங்கினார். தாய் மரியாவிடமும் அவர் பக்தி கொண்டிருந்தார். 1952 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் தேதி அவர் இறைவனடி சேர்ந்தார். 1987 ஆம் ஆண்டு இறையடியார் நிலைக்கு உயர்த்தப்பட்ட அவர் 2002 ஆம் ஆண்டு ஜூலை 05 ஆம் தேதி வணக்கத்துக்குரியவராகவும் அறிவிக்கப்பட்டார். 2006 ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் திரத்தந்தையின் ஆணைக்கிணங்க உயர் பேராயர் மார் வர்க்கி விதயத்தில் அவரை அருளாளராக அறிவித்தார்.



*அருளாளர் சாவறா குரியாக்கோஸ் எலியா* (திருநாள்: ஜனவரி 3)

அருட்தந்தை சாவறா குரியாக்கோஸ் எலியா 1805 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் தேதி குரியாக்கோஸ் சாவறா, மரியம் தோப்பில் தம்தியர்க்கு மகனாக ஆலப்புழா அருகாமையில் உள்ள கைனகிரியில் பிறந்தார். தூய ஜோசப் ஆலயப் பங்குதந்தையின்

வழிகாட்டுத□ன் கீழ், குருவாகும் நோக்குடன் தனது பயிற்சியை அவர் தொடங்கினார். தனது 13 ஆம் வயதில் பள்ளிப்புறம் குருத்தவக் கல்லூரியில் இணைந்த அவர் 1829 ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். சில ஆண்டுகள் பங்கில் பணிபுரிந்த அவர், குருத்துவக்கல்லூரியில் பேராசிரியாக பணிபுரிய தொடங்கினார். இரு குருக்களோடு இணைந்து அவர் மாசற்ற மரியாவின் கார்மலர்கள் என்னும் புதிய துறவற சபையை அவர் தொடங்கினார். குருத்துவப் பயிற்சி, தியானங்கள், கத்தோ□க்க நூல்களை வெளியிடுதல், மறைக்கல்வி, மற்றும் மரண தருவாயில் இருப்போருக்கான உதவி ஆகியவை இச்சபையின் பணிகளாக தொடங்கப்பட்டது. தனது உறுதியான நிலைப்பாடு, திருச்சையின் ஒற்றுமைக் குறித்த விழிப்புணர்வும், சபையை பல பிளவுகளினின்று காத்தது. இவர் சீரோ மலபார் சபையில் ஒருமித்த கருத்து உருவாகவும், வழிபாடுகள் ஒரே முறைமையை கொண்டதாகவும் இருக்க நூல்களை வெளியிட்டார். இவர் தம் பணி இன்றும் பெரிதும் மெச்சப்படுகிறது. 1856 முதல் 1871 ஆம் ஆண்டு அவர் இறக்கும் வரை, துறவற இல்லங்களின் பொது தலைவராக பணிபுரிந்தார். 1984, ஏப்ரல் 17 ஆம் தேதி இறையடியார் மற்றும் வணக்கத்துக்குரியவர் என்னும் நிலைகளுக்கும் 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி 8 ஆம் தேதி கோட்டயத்தில் வைத்து அருளாளர் என்னும் நிலைக்கும் திருதந்தை இரண்டாம் ஜாண் பால் அவர்களால் உயர்த்தப்பட்டார்.





## BIRTHDAYS OF REV FATHERS - MAY

| NAME | BIRTH DAY |
|---|---|
| Fr. Berchmans Kattapuram CMI<br>09446274515 | 02 |
| Fr. Augustine Alapurackal<br>9442002416 | 02 |
| Fr.Joseph Santhosh | 04 |
| Fr.Davis Karukappally CMI<br>9444318884 | 10 |
| Fr. James Ambalathattil CMI<br>7598641028 | 16 |
| Fr. John Paul<br>7598687828 | 17 |
| Fr. Jinoy Thomas<br>8489638890 | 24 |
| Fr. Thomas Thuckalay<br>9486628310 | 25 |
| Fr. Robin Koorumullil<br>9791444345 | 25 |
| Fr. Prince Maliyil<br>8903116904 | 28 |
| Fr. Christudas<br>9487426890 | 28 |
| Fr. Tinu Kattackaparampil CMI<br>9076594495 | 29 |
| Fr. Varghese Padinjaril OSB<br>9843423928 | 30 |

**வாழ்த்துச்சொல்வோம் வாங்க...**

## புற்றுநோயால் வாடும் குழந்தைகளுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனுப்பியுள்ள 'Easter Egg' பரிசுகள்

"கொரியாவில் நிகழ்ந்துள்ள உல்லாசக் கப்பல் விபத்தில் இறந்த அனைவருக்காகவும், அவர்கள் குடும்பத்தினருக்காகவும் என்னோடு இணைந்து தயவுசெய்து செபியுங்கள்" என்ற Twitter செய்தியை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இச்சனிக்கிழமை வெளியிட்டுள்ளார். ஏப்ரல் 16 அன்று, தென்கொரியா உல்லாசக் கப்பல் ஒன்று கவிழ்ந்ததில், அதில் பயணம் செய்த 475 பேரில், 287 பேரில் நிலை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இவர்களில் பெரும்பாலானோர் பள்ளியில் பயின்றுவரும் மாணவ, மாணவியர், மேலும், உரோம் நகரில், 'Bambino Gesu' என்றழைக்கப்படும் குழந்தை இயேசு குழந்தைகள் மருத்துவமனையில் புற்றுநோயால் வாடும் குழந்தைகளுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 'Easter Egg' என்று சொல்லப்படும் 'உயிர்ப்பு முட்டை'களை, பரிசாக அனுப்பியுள்ளார். கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் தேதி, கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், குழந்தை இயேசு மருத்துவமனைக்குச் சென்று, குழந்தைகளுக்கு தன் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை நேரடியாகத் தெரிவித்தார். உயிர்ப்புப் பெருவிழாவையொட்டி, அங்கு புற்றுநோயால் வாடும் 150 குழந்தைகளுக்கு இனிப்பு வகைகள் அடங்கிய சாக்கலேட்டால் செய்யப்பட்ட 'உயிர்ப்பு முட்டை' திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் பரிசாக அனுப்பியுள்ளார், 1924-ம் ஆண்டு, குழந்தைகளுக்கென்று உருவாக்கப்பட்ட 'Bambino Gesu' எனப்படும் இச்சிறப்பு மருத்துவமனை, திருத்தந்தையர் பலரின் தொடர்ந்த ஆதரவைப் பெற்று வருவதால், 'திருத்தந்தையின் மருத்துவமனை' என்றும் அழைக்கப்படுகிறது. 1958 ஆண்டு, திருத்தந்தை 23-ம் ஜாண் அவர்கள், இம்மருத்துவமனைக்கு நேரில் சென்று, குழந்தைகளைச் சந்தித்த நிகழ்ச்சிக்குப் பின், அவரைத் தொடர்ந்த அனைத்து திருத்தந்தையாரும் 'Bambino Gesu' மருத்துவமனைக்குச் சென்று குழந்தைகளை அவ்வப்போது சந்தித்து வருகின்றனர்.



'இவ்வுலகம் வழிபாட்டு வரும் பொய் தெய்வங்களிலெல்லாம் தலையானது பணம்' திருத்தந்தையர் இல்ல மறையுரையாளர்

'இவ்வுலகம் பல்வேறு பொய் தெய்வங்களை வழிபட்டு வருகிறது. அந்தப் பொய் தெய்வங்களிலெல்லாம் தலையானது, பணம்' என்று திருத்தந்தையர் இல்ல மறையுரையாளரான அருள்பணி Raniero Cantalamessa அவர்கள் கூறினார். புனித வெள்ளியன்று மாலை 5 மணிக்கு, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்காப் பேராலயத்தில் இடம்பெற்ற திருப்பாடுகள் மற்றும் திருச்சிலுவை வழிபாட்டில், அருள்பணி Cantalamessa அவர்கள், பணத்தாசை இவ்வுலகில் விளைவிக்கும் தீமைகளை மையப்படுத்தி மறையுரை வழங்கினார். இயேசுவின் சீடர்களில் ஒருவராக தன் வழ்வைத் துவக்கிய யூதாசு, இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் துரோகியாக மாறும் அளவுக்கு அவரை மாற்றியது பணத்தாசை என்பதை அருள்பணி Cantalamessa அவர்கள் வலியுறுத்திக் கூறினார். யூதாசிடம் பணப்பை இருந்ததென்றும் (யோவான் 13:29), அவர் பொதுப் பணத்தை எடுத்துச் செலவழித்தார் என்றும் வாசிச்கும்போது, பொதுமக்கள் பண்த்தைக் கண்காணிப்போருக்குச் செய்திகள் சொல்லப்படுகின்றனவா என்ற